விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 23 முஹற 13 இதழ் 237
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9-10-84

## தமிழர் பிரச்னை: புதிய அணுகுமுறை தீர்வுகாணும் முயற்சியில் தென்னிலங்கை மதகுருமார்!

### முதற்குழு தமிழகம் புறப்பாடு

(யாழ்ப்பாணம்)

தமிழர் பிரச்னைக்கு அமைதியானமுறையில் தீர்வுகாணும் முயற்சியில் மதகுருமமார் கொண்ட குழு ஒன்று விரைவில் தென் இந்தியாசெல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

தென்லிலங்கையைச் சேர்ந்த இந்த மதகுருமார் குழுவுக்கு இளம்தமிழ் அரசியல் பிரமுகர் ஒருவர் தலைமை தாங்கிச் செல்லவுள்ளதாகவும் அறியப்படுகிறது.

தென்னிந்தியா செல்லவிருக்கும் இந்த மதகுருமார்குழு அங்கிருக்கும் தீவிரவாதத் தலைவர்களைச் சந்தித்து ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு அமைதியான முறையில் அரசியல்தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தவுள்ளதாகவும் நம்பிக்கையான வட்டாரங்களிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது.

(மா)

## எண்ணெய்க்குழாய்க்கு வைக்கப்பட்ட குண்டுகள்! பெருந் தீவிபத்திலிருந்து கொழும்பு நகர் தப்பியது!!

(கொழும்பு)

கொழும்பு நகரில் நேற்று ஏற்படவிருந்த பெரும் தீவிபத்து, தெய்வாதீனமாக நிகழவில்லை என்று பொலிசார் தெரிவித்தனர். கொழும்புத் துறைமுகத்திலிருந்து கொலன்னுவ சப்புகஸ்கந்தைக்குச் செல்லும் பிரதான எண்ணெய் விநியோகக் குழாய்க்கு வைக்கப்பட்ட குண் கள் பெரும் சத்தத்தோடு வெடித்தபோதிலும்; குழாய்க்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்றும்; அருகிலிருந்த ஐந்து சேரிவீடுகள் மட்டுமே சிறுசேதமடைந்தன என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

இந்தக் குழாய் வழியாகவே கொழும்புத்துறைமுகத்திலிருந்து கொலன்னுவ பிரதான எண்ணெய்க்குதத்துக்கு சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விநியோகிக்கப்பட்டுவருகிறது.

(5-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மாணவர் விவகாரம் லலித்துடன் 12-ல் சந்திப்பு

### யாழ். அரச அதிபர் ஏற்பாடு

(கா. யோகநாதன்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி கல்லூரிகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்ற வடமராட்சி மாணவர்கள் கோரிக்கை தொடர்பாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அதிபர்கள், மாணவர் குழுவொன்றை இம் மாதம் 12-ம் திகதி வெள்ளிக்கிழமை சந்திக்க சம்மதம் தெரிவித்துள்ளார்

யாழ். பல்கலைக் கழகத்தில் பயிலும், முன்னுள் ஹாட்லி மாணவர்கள், சிலதினங்களுக்கு முன் ஊர்வலமாகச் சென்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தை சந்தித்தார்கள். இச்சந்திப்பின் போது அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதல்யை நேரில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்துதரமுயற்சிப்பதாக மாணவர்களிடம் உறுதியளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அரசாங்க அதிபர் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியுடன் தொடர்பு கொண்டு இதுபற்றி தெரிவித்த போது அமைச்சர் குழுவைச்சந்திக்க சம்மதம் தெரிவித்தார்.

இம்மாதம் 12-ம் திகதி

(8-ம் பக்கம் பார்க்க)

## 'ஹாட்லி' பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

ருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் சில பகுதிகள் மீண்டும் சேதமாக்கப்பட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்தமாதம் திக்கத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து ஹாட்லிக்கல்லூரியின் நூலகமும் சில வகுப்பறைகளும் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

## 15 பேர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

நெடுந்தீவு கடலில் நேற்று முன்தினம் கடற்படையினரால் சோதனையிடப்பட்ட 'மணிமேகலை' மோட்டார் படகிலிருந்து விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டவர்களில் 15பேர் தீவிர விசாரணையின் பின் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

ஆறு பேர் தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

## குழுவினர் இன்று பிரிகேடியருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றி கல்லூரிகளை மீண்டும் நடத்த வேண்டும் என்றமாணவரின் கோரிக்கை தொடர்பாக அமைச்சர் லலித் அத்துலத் முதலியை சந்திக்கவிருக்கும் குழுவினர் இன்று காலை 10 மணிக்கு குருநகர் முகாமில் யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரி திரு.நளின்செனிவரத்தனவைச் சநதிக்கவிருக்கிறார்கள்,

குழுவினர் அமைச்சர் லலித் அத்துலத் முதலியைச் சந்திக்க விருப்பதுபற்றி நேற்று யாழ்.

[8ம் பக்கம் பார்க்க]

## பத்திரிகைகளுக்கெதிரான வழக்கு நீதிமன்றின் நியாயாதிக்கம்: 25-ம் திகதி விசாரணை

(கொழும்பு)

சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் அரசியல் சட்டத்தின் 6 - வது திருத்தத்தின்கீழ் விசுவாசப் பிரமாணம் எடுத்தது பற்றிய செய்தித் தொடர்பாக கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் நான்கு பத்திரிகையாளர்கள் மீது தவறான செய்தி பிரசுரித்ததாகக் குற்றஞ் சாட்டித்

[8ம் பக்கம்க்கபாா]

## அல்லைப்பிட்டியில் ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

கடல் அட்டைபிடிப்பதற்குச்சென்ற மீனவர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அல்லைப்பிட்டிக் கடற்கரைப் பகுதியில் நேற்றுப்பிற்பகல் இச்சம்பவம் நடைபெற்றதாகக்கூறப்படுகிறது.

இச்சபபவத்தின்போது

[5ம் பக்கம் பார்க்க]

## ப.நோ.கூ.ச.மூலம் ஒய்வூதியம் பலருக்கு அக்கறை இல்லை!

### அரச அதிபர் கவலை

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். விளையாட்டரங்கில் ஓய்வூதியம் பெற்றுவந்தவர்களுக், அவரவர் வசிக்கும் இடங்களில் உள்ள பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள்மூலம் இலகுவாக ஓய்வூதியம் வழங்க யாழ் அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துவந்த போதிலும் மூன்றில் இரண்டு பகுதியினர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லையாம்.

அண்மைக்காலங்களாக சுமார் 8,000 பேர் பலசிரமங்களுக்கு மத்தியில், யாழ் திறந்தவெளியரங்கில் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

வயதான காலத்தில் அவர்கள்படும் கஷ்டநிலையை உணர்ந்த யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் ப. நோ. கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதற்கு அவர், ஓய்வூதியம் பெறுவோரிடமிருந்து ஓய்வூதியம் எடுக்க விரும்பும் இடம், ஓய்வூதிய இலககம் முன்னர் எடுதத தபால் நிலையம் கிராமிய வங்கி இலக்கம் போன்ற

(5-ம் பக்கம பார்க்க)

## தேயிலைப் பெட்டியில் 13 லட்சம் ரூபா!

(கொழும்பு)

தேயிலைப் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டு வெளிநாடுகொண்டு செல்லப்படவிருந்த 13 லட்சம் ரூபா பயணிகள் காசோலை நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுங்கஅதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இலங்கைக்கும் சிங்கப்பூருக்குமிடையே வர்த்தகநடவடிக்கைகளை மேற்கொள்ளும் இலங்கையின் பிரபல முஸ்லிம் வர்த்தகர்கள் ஒருவரே இந்தகாசோலை கடத்தல்முயற்சியில் ஈடுபட்டவராவார்

இவருக்கு 40 லட்சம் ரூபா அபராதம் விதக்கப்பட்டது.

[5ம் பக்கம் பார்க்க]

## சேதப்பட்ட நிலையில் வான் மீட்கப்பட்டது

(கொழும்புத்துறை)

கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியால் கடத்தப்பட்ட யாழ். தொலைத்தொடர்புத் திணைகளத்திற்குச் சொந்தமான ஈ எல். எப். வான் மீட்கப்பட

(5-ம் பக்கம் பார்க்க)

# ...ரி விளம்பரம்

## விற்பனைக்கு

கோண்டாவில் பலாலி றேட்டில் சந்திக்கருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். ச. கனகசபாபதி (சிறுப்பர்), கோண்டாவில் கிழக்கு கோண்டாவில். 91

நல்ல நிலையிலுள்ள Peugeot 403 கார் உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: ச. ஜெயகுமார், ''அத்தாய் வளவு'' புலோலி தெற்கு, புலோலி 93

பாடசாலை, சந்தை முதலியவற்றுக்குச் சமீபமாக வீடு கட்டுவதற்குரிய அத்திபாரக் கட்டுடன் 2¼ பரப்புக்காணி கல்வியங்காடு டச்சு வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: வ. த இராசையா, ஞான பாஸ்கரோதய சங்க வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 71

மொறிஸ்மைனர் 1 ஸ்ரீ 5621 விற்பனைக்குண்டு. தொடர்பு; எஸ். சபாரத்தினம், ''வதனு வெல்டிங் வேக்ஸ்'', 44/3, மணிக்கூட்டு வீதி (B.M.C க்கு முன்பாக) யாழ்ப்பாணம். 69

கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ் தவமணி மே/பா, சபாரத்தினம், 74, கண்டிவீதி, சுண்டுக்குழி. 103

Honda N C 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பே. பரமசாமி (ஓவசியர்), வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. 104

## தேவை

Marketing Assistant தேவை. தகுதி திறமையுடையவர்கள் 12-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டெட், 43, பாங்ஷால்வீதி, யாழ்ப்பாணம். 45

எழுபது வயதுடைய சற்று நோயுற்ற சமூகசேவைகளில் ஈடுபடும் செல்வந்த வயோதிபரைப் பராமரிக்கவும் அவரின் வீட்டு நிர்வாகத்தைக் கவனிப்பதற்கும் ஐம்பது வயதுக்குட்பட்ட நல்ல தேக ஆரோக்கியமுடைய சற்று கல்வி அறிவுடைய, தெய்வ பக்தியும், நற்பண்புகளும், நல்லொழுக்கமுள்ள, அன்புள்ளமுள்ள நம்பிக்கையான பெண் தேவை. நல்லசம்பளமும் உணவும்தங்கவசதியும் செய்து கொடுக்கப்படும். வீட்டில் மனைவியும், பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் வேலைக்காரரும் உளர். பொறுப்பற்ற வறியவர்களும் அனாதைகளும்விரும்பப்படுவர். அன்பாகவும், நம்பிக்கையாகவும் சகோதர பாசத்துடனும் வயோதிபரைக் கவனிப்பவர்கட்கு அவர் இறந்த பின்பும் பணக்கஷ்டமின்றி வாழ்க்கை நடத்த சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும். முதலில் சகல விபரங்களும் குறிப்பிட்டு கடிதமூலம் மாத்திரம் விண்ணப்பிக்கவும். நேரில் வருவோர் சந்திக்கப்படமாட்டார். விளம்பர இல: 101, C/o, ஈழநாடு. 101

## பி. ரி. ஐ. நிருபர் தர்மராஜன் தாயகம் திரும்பினர்

(கொழும்பு)

இந்திய பி. ரி. ஐ செய்தி ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதியான திரு. தர்மராஜனுக்கு நியுயோர்க்கில் புதிய பதவியொன்று வழங்கப்பட்டுளளது.

திரு. தர்மராஜன் இலங்கை அரசுக்கு மாறுன செய்திகளை வெளியிட்டார் என்று தெரிவித்து நாட்டிலிருந்தும் வெளியேறும்படி இலங்கை அரசு கேட்டிருந்தது.

இதையடுத்து இலங்கையிலிருந்தும் வெளியேறிய திரு தர்மராஜனுக்கு நியுயோர்க்கில் பி.ரி.ஐ.புதிய பதவியொன்றை வழங்கியுள்ளது. பி. ரி. ஐ. இவர்மீது மிகுந்த விசுவாசம்கொண்டிருந்ததாகத்தெரிவிக்கப்பட்டது.

திரு. தர்மராஜன் நேற்று தாயகம் திரும்பினர். (கி)

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 151. கஸ்தூரியார் வீதி, தற்போது 22, கன்னதிட்டி வீதி சத்தியா அன் கோ. அவர்களிடம் 15-8-82 முதல் 30-9-83 வரை அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 9-11-1984 காலை பத்து மணி தொடக்கம் அதே கடையில்வைத்து என்னுல் விற்கப்படும்.

கு. இராஜகோபால்
ஏல விற்பனையாளர்
வண்ணார்பண்ணை. (33)

## கேள்விப் பத்திர அறிவித்தல்

மன்னார் அபிவிருத்திச் சபை ரூபா 400,000/க்கு மேல் பதிவு செய்யப்பட்ட அரசாங்க ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பின்வரும் வேலைக்கான கேள்வியை இத்தால் கோருகின்றது.

கேள்விவிண்ணப்பங்கள் அபிவிருத்திச் சபையினுல் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் படிவங்களை மன்னார் அபிவிருத்திச் சபையின் மாவட்டப் பொறியியலாளரிடம் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 200/-ம் கேள்விவைப்புப்பணமாகரூபா1000/ம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 29-10-1984ந் திகதிக்குமுன்னர் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 16-10-84ம் திகதி முதல் 25-10-1984ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் ஏழு [07] நாட்களுக்குள் பிணைப்பணம் செலுத்தி வேலையைத் தொடங்கி குறித்த காலத்தினுள் வேலை முடித்து ஒப்படைக்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மன்னார் அபிவிருத்தி சபையின் வேலைப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

### வேலையின் விபரம்

மன்னார் புதிய பஸ் நிலையத்திற்கு அருகில் அறைக் கடைகள் நிர்மாணித்தல்.

எம். எம். மக்பூல்,
பிரதிச் செயலாளர்,
வேலைகள்,
மன்னார் அபிவிருத்திச் சபை

மன்னார்
அபிவிருத்திச் சபை,
மன்னார்.
1984-10-01 102

# கோட்டு விற்பனவு விளம்பரம்

## ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல: MB / 142

1. சிவகுரு கணேசனும் பெண் 2. சங்கநிதியும் இருவரும் கருங்காலி, காரைநகர் மேற்கு, காரைநகர். — வழக்காளி

எதிராக

1. கந்தையா சச்சிதானந்தம். பாலாவோடை, காரைநகர் கிழக்கு, காரைநகர்.
2. இராசரத்தினம் பொன்னம்பலமும் பெண்
3. இராசேஸ்வரியும்.

இருவரும் காரைநகர் கிழக்கு, காரைநகர்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் MB/142ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1984ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 29ஆம் திகதி 29-10-84 திங்கட்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை:

மேற்குறித்த எதிராளிகள் குறித்து வழக்காளிகளுக்கு ரூபா 12000/-வும் மேலும் ரூபா 6000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வீத வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1981ஆம் ஆண்டு தை மாதம் 9ம் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1982ஆம் ஆண்டு மார்கழி மாதம் 17ம் திகதி வரையுமான வட்டியும் அதன் பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியானவருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 3728/50 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்:


வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப் பகுதி காரைதீவுக் கோவிற்பற்று காரைதீவு கிழக்கிறை ''மலையாளப் புரியல்'' நிலப்பரப்பு 17¾ பதினேழேகால் இதற்கு எல்லை கிழக்கு சண்முகம் வேலுப்பிள்ளையின்ஆதனம், வடக்கு கனகசபை கந்தையாவுக்கும் சண்முகம் கந்தையாவுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு சோமசுந்தரம் தம்பிராசாவுக்கும் சுப்பிரமணியம் நல்லதம்பிக்கும் உரியவாதனம், தெற்கு சுப்பிரமணியம் நல்லதம்பியினுதனமும் றேட்டும் இதடங்கலும்.

சி. செ. பாலசிங்கம்
கொமிஷனரும் விலை மதிப்பாளரும்

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.
29-9-84 80

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

## கந்தசாமித்துரை ரவி



தோற்றம்: 22-11-1959

மறைவு: 10-9-1984

திரு. செ. கந்தசாமித்துரை அவர்களினதும் திருமதி க. இராஜசுந்தரேஸ்வரி அவர்களினதும் அன்புப் புதல்வனும் ரவி அன் ராஜ் சில்க் ஸ்தாபனத்தின் பணிப்பாளரில் ஒருவரும், சட்டக் கல்லூரிஇறுதிஆண்டு மாணவருமாகிய செல்வன் ரவி அவர்களின் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்.

ரவி எம் இதயக் கோவிலே!

திக்குத் தெரியாத வவனியாக் காட்டுக் காரிருளில் மூர்க்கர்களின் அரக்கத்தனத்தால் எமைப் பிரிந்த இன்பச் செல்வமே, நீ பயணத்திற்கென அன்பு விடை எம்மிடம் பெற்றுயே. அது இறுதிப் பயணம் என்று யார் தான் அப்போது அறிந்தோம்.

வானத்துச் சூரியன் உதிக்க ஆயத்தமாகும் காலை வேளை, சதிசூழ உன் வண்ணப் பொன் மேனியில் காலதூதர்கள் அந்தோ! எமது குடும்ப இளஞ்சூரியன் நீ அஸ்தமிக்கிருய். பரி.யோவான் கல்லூரியெனும் சோலையில் முளைவிட்ட கனி மரமே. சட்டத்தரணிப் பட்டமெனும் கனிகொடுக்கும் பருவத்திலே சண்டமாருதம் வேருடன் உன்னைச் சாய்த்ததுவோ, கரை காணு ஆருத்துயரில் தவிக்கும் நாம் உன் ஆத்மா சாந்தி பெற இறைவனை உருகி உருகி இறைஞ்சுகிருேம்.

அன்னுரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொண்டோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோர்க்கும், பேருதவிகள் புரிந்த அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றி.

10-10-1984 அன்று காலை 7 மணிக்கு கீரிமலையில் கிரியைகள் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். அவரின் அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

ஆருத்துயருறும்
அன்புத் தந்தை, அருமைத் தாய்,
சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்.

34, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம். 87

## முதலுதவி பயிற்சி நெறி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவில் இலவச முதலுதவிப் பயிற்சி நெறி அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது

சங்கத்தலைவர் திரு மு. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண வைபவத்தில் சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பயிற்சியை ஆரம்பித்து வைத்தார்.

## தொலைத் தொடர்பு துண்டிப்பு

(நெடுந்தீவு)

நயினுதீவு, அனலைதீவு தபாலகங்களின் தொலை தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதனுல் இப்பகுதிமக்கள் தொலை தொடர்புவசதிகளில்லாது பெரும்பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

நெடுந்தீவு தபாலகத்தின் தொலை தொடர்பும் துண்டிக்கப்படலாமெென கூறப்படுகிறது.

## உள்ளூராட்சி சபைகள்

[கொழும்பு]

'உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்தில் புதிதாக 250 உள்ளூராட்சி சபைகள் நிறுவப்படவுள்ளன. இந்த சபைகளுக்கான உறுப்பினர்களை பொது மக்கள் தெரிவு செய்வார்கள். இந்த சபைகள் தற்போது மாவட்டங்களில் கச்சேரிகளினுல் செய்யப்படும் வேலைகளை மேற்கொள்ளும் நாட்டு மக்களுக்கு கூடுதலான அதிகாரங்களை அளிக்கும்வகையிலேயே இந்த சபைகள் அமைக்கப்படவுள்ளன. இவ்வாறு பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா மாவனல்லவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

## ''சகலருக்கும் சுகாதார வசதிகள்''

(பண்டத்தரிப்பு)

''இரண்டாயிரமாவது ஆண்டில் சகலருக்கும் சுகாதார வசதிகள கிடைக்கவேண்டும் என்பதுவே அரசின் திட்டமாகும். இத்திட்டத்தைச் சிறந்தமுறையில் அமுல்படுத்துவதற்குச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள் ஆகியோருக்கு கிராம சுகாதாரத் தொண்டர்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும்''

இவ்வாறு சங்கானை வடக்குப் பிரிவில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் பண்டத்தரிப்பு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் திரு. மாணிக்கவாசகர் குறிப்பிட்டார்.

வடலியடைப்பு ப. நோ. கூ. சங்கக் கிளைக் கட்டிடத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கிற்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. இ. செல்வரத்தினம் தலைமைவகித்தார். மேற்பார்வை சுகாதாரத் தாதி திருமதி எஸ். சண்முகராசா ஆரம்ப சுகாதாரத் திட்டத்தின் 17 அம்சங்களைப் பற்றித் தமது உரையில் விளக்கிக் கூறினுர்.

சங்கானை வடக்கு குடும்ப நலச்சேவையாளர் செல்வி ஐ. கைலாசபூபதி உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

# "பிராந்திய ஒற்றுமையில் அயல் நாடுகள் உறுதியின்மையால் ஆயுதபலத்தில் இந்தியா அக்கறை!'

## போர் வீரர்கள் மத்தியில் இந்திரா உரை!!



ஜெய்பூர், அக், 8

**"அயல் நாடுகளின் பிராந்திய ஒற்றுமை உறுதியாக இல்லாததாலேயே இந்தியா ஆயுத படைபலத்தை அதிகரிப்பதில் ஆர்வங்காட்டுகிறது" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா கூறினார்.**

ஜெய்பூரில் நேற்று ஆயுதப் படைவீரர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திருமதி இந்திரா காந்தி தொடர்ந்து பேசியதாவது:

''இந்தியா அதன் அண்டை நாடான பாகிஸ்தான், சீனா ஆகியவற்றுடன் கருத்துவேற்றுமைகளை நீக்குவதில் விருப்பங்கொண்டுள்ளது.

ஆயுதப் பூசல்களைத் தவிர்த்து அமைதி, நட்புறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதில் இந்நாடுகளுடன் இணைவதற்கு இந்தியா தயாராக இருக்கின்றது ஆயினும் பாகிஸ்தானின் போர்விலக்கல் குறித்த யோசனைகள் இந்தியாவிற்கு குழப்பமளிப்பனவாகவே உள்ளன.

அதி நவீன போர் ஆயுதங்களை வாங்கிக்குவித்துத் தனது இராணுவ வலிமையை நவீனப்படுத்திக்கொண்டே பாகிஸ்தான் போர்விலக்கல் யோசனையை இந்தியாவுக்கு வழங்குகின்றது.

இந்நிலையில் இந்தியா கண்மூடித்தனமாக எதுவும் செய்துவிடமுடியாது. பாகிஸ்தான் அமைதியை ஏற்படுத்த போர் விலக்கல் யோசனையை முன்வைக்குமுன்னரும் ஆயுதங்களைக் குவிப்பதை நிறுத்த வேண்டும். இதன் பின்னரே போர் விலக்கல் ஒப்பந்த யோசனை குறித்து இந்தியாவால் பரிசீலனைசெய்யமுடியும்.

அண்டை நாடுகள் இந்தியுடன் இணைந்து பிராந்திய ஒற்றுமை, அமைதி ஆகியவற்றைக் கட்டிக் காப்பதில் உறுதியற்றனவாக இருக்கின்றன. ஆகையினாலேயே தனது சொந்தப் பாதுகாப்புக்கருதி இந்தியா ஆயுத படைபலத்தைக் கூட்டவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது'' என்றார். (கி)

## இடி மின்னல் தாக்கி பாடசாலை மாணவர்கள் பலி!

நைரோபி, அக் 8

கென்யாவின் சிறிய கிராமமொன்றில் இடி மின்னல் தாக்கியதால் 9 பாடசாலைச் சிறுவர்கள் கொல்லப்பட்டனர்!

இவர்களில் 4 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனையவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில் இறந்தனர்.

பாடசாலையின் மைதானத்தில் நின்றபோதே இக்கோரச் சம்பவம் நிகழ்ந்தது கடந்த ஆண்டும் இப்பாடசாலைக்கு 8 மைல்கள் தொலைவிலுள்ள வேறொரு பாடசாலையிலும் இடிமின்னல் தாக்கியதில் 11 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது (கி)

## ரீகன்– மொண்டேல் முதலாவது நேருக்கு நேர் தொலைக்காட்சி விவாதம்!

### நடுவர்களாக பத்திரிகையாளர்

வாஷிங்டன், அக். 8

இந்த ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களுக்கிடையிலான முதலாவது நேரடித் தொலைக்காட்சி விவாதம் நேற்று இடம்பெற்றது.

ஜனாதிபதி திரு ரீகன், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் திரு. மொண்டேல் ஆகிய இருவரும் நேருக்கு நேர் இவ்விவாதத்தில் கலந்துகொண்டனர்

அமெரிக்க பொருளாதாரம், ஆட்சிப் பொறுப்பு, இருவரதும் தனிப்பட்டமதநம்பிக்கைகள குறித்து விவாதங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டன. மூன்று பிரபல பத்திரிகையாளர்கள் இவ்விவாதத்துக்கான நடுநிலையாளர்களாக விளங்கினர்.

''அமெரிக்கப் பொருளாதாரம் தற்போது மிகவும் மேம்பட்டுவருவதாகவும், மீண்டும் தான் ஜனாதிபதியானால் வரிகள் குறைக்கப்பட்டு பொருளாதார நிலை ஸ்திரமாக்கப்படும்'' என்றும் திரு. ரீகன் குறிப்பிட்டார்.

திரு. மொண்டேல் தமது விவாதத்தில், திரு. ரீகனின் ஆட்சியில் அமெரிக்காவின் கடன்பளு மேலும் அதிகரித்துச் செல்லுவதாகவும், ஆயுதங்களுக்கான செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமே கடன் சுமையைக் குறைக்கலாமென்றார்.

இவ்விவாதம் நேற்று அமெரிக்க தொலைக்காட்சி நேயர்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 4வாரங்களே இருக்கின்றன. அண்மையில் நடத்தப்பட்ட சிலஅபிப்பிராய வாக்கெடுப்புக்களில் திரு. ரீகனே முன்னணியில் இருப்பது தெரியவந்துள்ளது. (கி)

## ஈரானுக்கு இஸ்ரேல் ஆயுத உதவி?

### முஜாஹிதீன் இயக்கம் தகவல்

பாரிஸ், அக். 8

இஸ்ரேலிடமிருந்து ஈரான் ஆயுத உதவிகளைப் பெறுவதாக ஈரானிய அரசுக்கெதிரான முஜ ஹிதீன் இயக்கம் தெரிவித்துள்ளது.

பாரிஸில் இயங்கிவரும் இந்த இயக்கம், கடந்த ஏப்ரல் மாதம் இஸ்ரேலின் 'எல் எவ்' என்ற தேசிய விமானச் சேவை விமானமொன்று உட்பட மூன்று சரக்கு விமானங்கள் மே ஜெர்மனியின் பிராங்பேர்ட் விமான நிலையமூடாக ஈரானுக்கு ஆயுதங்களை அனுப்பிவைத்தன என்று தெரிவித்துள்ளது.

[6ம் பக்கம் பார்க்க]

## ஜெர்மன் இணைப்பு: சோவியத் அனுமதிக்காது!

பெர்லின், அக். 8

''கிழக்கு-மேற்கு ஜெர்மன் நாடுகளை இணைக்கும் முயற்சியை சோவியத் யூனியன் ஒருபோதும் அனுமதிக்காது கம்யூனிஸ கொள்கைகளுக்கெதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து முறியடிக்கப்படும்'' என்று சோவியத் யூனியன் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

கிழக்கு ஜெர்மனியின் கம்யூனிஸ ஆட்சியின் 35-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நாட்டுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச்செய்தியிலேயே சோவியத்தின் கிரெம்ளின் ஆட்சிபீடம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது

நேற்று கிழக்கு பெர்லின் நகரில் மாபெரும் இராணுவ அணிவகுப்பொன்று 35-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டது. கிழக்கு ஜெர்மனியின் இராணுவ பலத்தை பிரமாண்டமான முறையில் காட்டுவதாக இந்த அணிவகுப்பு விளங்கியது

கிழக்கு ஜெர்மனுக்கான பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கத் தூதுவர்கள் 'நேட்டோ' நாடுகளை அச்சுறுத்துவதே இந்த அணிவகுப்பின் நோக்கமென்று கி. ஜெர்மன் அரசிடம் தமது ஆட்சேபனையைத் தெரிவித்தனர்.

இதேவேளை கிழக்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹொனேக்கருடன், சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிகோ, விசேட மேடையொன்றின் மீது நின்று அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டார்

சோவியத் தயாரிப்பு டாங்கிகள், அதிவேக குண்டு வீச்சு விமானங்கள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள் என்பனவற்றுடன் கிழக்கு ஜெர்மன் தரைப்படையின் வண்ணமிகு கம்பீர அணி நடையும் இந்த அணி வகுப்பு நிகழ்ச்சியை மெருகூட்டின

கிழக்கு-மேற்கு ஜெர்மன் உறவு நெருக்கமடைவதைத் தவிர்க்கவே சோவியத்தின்பின்னணியுடன் இவ்வணிவகுப்பு ஒழுங்கு செய்யப்பட்டதென்று 'நேட்டோ' நாடுகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. (கி)


## உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

# லங்கா சீமெந்து

# LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

## 'லங்கா சீமெந்து லிமிட்டட்'

## LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது

'லங்கா சீமெந்து'

தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,

லங்கா சீமெந்து லிமிட்டட்

கீரிமலை ரோட்,

காங்கேசன்துறை.

போன் :- 22605

### மணிவாக்கு

குப்பையில் கிடக்கும் போதும், பெட்டகத்தில் வைத்திருக்கும் போதும் மாணிக்கம் மாணிக்கமே. சான்றோன் எல்லா நிலைகளிலும் சான்றோனுக இருக்கிறன்.

— அருள்விருந்து

## நமது நோக்கு

## ஐந்து வருட அர்த்தமற்ற போர்

உங்கள் கணவனுக்கு எது விருப்பம் யுத்தமா? சமாதானமா? என்று திருமதி நான்சி றீகனை சோவியத் வெளிவிவகார அமைச்சர் குரோமிக்கோ கேட்டார்.

'சமாதானம்' என்ற விடை கிடைத்தது. "நல்லது ஒவ்வொரு இரவும் அந்தச்சொல்லை அவர் காதினில் ஜெபித்துவிடும்."

"தங்களுடைய. காதினிலுமே அப்படிச் செய்கிறேன்' என்று கூடச் சொன்னூர் நான்சி.

இச்சம்பாஷணை ஒரு தேநீர் உபசாரத்தில் நடந்ததெனினும், அதில் மறைந்திருக்கும் தத்துவம் உணராத உலகில் அமைதி நிலவாது.

இதனைத் தெளிவாக ஆராய்ந்து அரிய கருத்துரை வழங்கியிருக்கிறுர் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கைத் திட்டக் கமிட்டித் தலைவர், அமைச்சர் அந்தஸ்துடைய திரு. ஜீ. பார்த்தசாரதி.

அணிசேரா நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்கள் மாநாட்டை ஐ. நா.வில் கூட்டித் தலைமைவகித்துப் பேசிய திரு. பார்த்தசாரதி உலகின் அபாய நிலையங்கள் அனைத்தையும் விரிவாக ஆராய்ந்திருக்கிறுர்.

குறிப்பாக மூன்றும் உலக நாடுகள்— இரு சகோதரர்கள் ஈராக், ஈரான் ஒருவரையொருவர் கொல்லும் சாதனை ஐந்தாவது வருடத்தில் தொடர்கின்றது. இந்தியாவும் அதன் நேச நாடுகளும் இதனை நிறுத்த பல நடவடிக்கைகள் எடுத்தபோதும்இதுஇன்னும் நின்றபாடில்லை என்ற கவலை பார்த்தசாரதியின் பேச்சில் முக்கியஇடம்பெறுகின்றது.

தொடக்கத்தில் நாம் குறிப்பிட்ட சம்பாஷணைஒரு அடிப்படை உண்மையை விளக்குகிறது. போரும், சமாதானமும் மனிதர்மனத்தில் எழும் உணர்வில் உருவாகிறது.

ஈராக் - ஈரான் யுத்தம் இதற்கு நல்ல உதாரணமாகிறது.

நான்கு வருடங்களுக்கு முன் (செப்டம்பர்22,1980) போரைத் தொடங்கினது ஈராக். இன்று அதனை முடிக்கவேண்டுமென்றும் அந்தரப்படுவது அந்த நாடே. ஆதியில் தோல்வியடைந்த ஈரான் எந்தவிதத்திலும் போரைத் தொடர வேண்டுமென்ற வெறிபிடித்திருக்கிறது.

போர் என்ற பேரழிவு தொடங்கிவிட்டால் அதனை முடிவுகட்ட ஒருபக்கத்துக்கு வெற்றிகிட்ட வேண்டும்; அல்லது பேச்சு வார்த்தை மூலம் யுத்த நிறுத்தம் அமுலாக்கப்படவேண்டும்.

இவ்விரண்டும் கிட்டாத நிலையில் வளைகுடா யுத்தம், எவ்வித அழிவைத் தொடர்ந்து உருவாக்குகிறது?

இதுவரையும் இரண்டு லட்சம் மானிடப்பிறவிகள் உயிரிழந்திருப்பதாக மதிப்பீடு குறிக்கிறது. இரு நாடுகளின் பொருளாதாரம் பல கோடி ரூபாக்கள் நட்டம் கண்டிருக்கிறது.

ஆரம்பத்தில் ஈராக் ஒரு சில மாதங்களில் ஈரானை முடித்துவிடலாமென்று நம்பியிருந்திருக்கலாம். எடுத்த எடுப்பில் ஈரானின் எண்ணெய் உற்பத்தியின் கேந்திர ஸ்தானங்களுக்கு பலத்த அடி கொடுத்து பெரு வெற்றி பெற்றது. 1982-ன் ஆரம்பத்தில் ஈரான் பதிலடி கொடுக்கத் தொடங்கியதும் எதிரியைத் தனது சொந்த நாட்டுக்கே புறங்காட்டுமளவிற்குத் துரத்திவிட்டது.

கடந்த இரு வருடங்களில் தொடரும் யுத்தம் அர்த்தமற்ற, உயிரும் உடைமையும் வீண் விரயமாகும். வெற்றி தோல்வியில்லாப் போராகவே இருக்கின்றது.

இன்றைய செய்தியைப் பார்த்தால் ஈரானின் புரட்சியரசு என்ன வந்தாலும் ஈராக்குடன் தொடர்ந்து போராடி ஒரு முடிவுகாண வேண்டுமென்று பிடிவாதம் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது.

மேற்கு ஜெர்மனியின் பிராங்பேட் விமான நிலையம் ஊடாக இஸ்ரேல் ஈரானுக்கு யுத்த ஆயுதம் உதவுகிறது என்று சொல்லப்படுகிறது.

இச் செய்தியை ஈரான் மறுத்தபோதும் இத்தகைய தர்மசங்கடம் போரில் எழுவது சகஜம்.

ஹிட்லரை ஒழிக்க அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் இணைந்ததை இன்று பார்க்கும்போது ஒரு நம்ப முடியாத நிகழ்ச்சியல்லவா?

ஈராக் தேசத்துக்கு ஆரம்பத்தில் வளைகுடா நாடுகள் பணத்தாலும், ஆயுத பலத்தாலும் உதவின. சோவியத் ரஷ்யாவே தரமான ஆயுதங்கள் கொடுத்து உதவிற்று. பிரான்ஸ் மிக உயர் தரமான போர் விமானங்களை உதவியது.

இவற்றையெல்லாம் எதிர்த்து தனித்துநின்று போராடிய ஈரான் மனித பலத்தில் தங்கிநின்றது. போரின் நோக்கம் எவ்வகையிலும் நிறைவேறவேண்டுமென்ற தீவிரம்கொண்டிருக்கிறது. நோக்கம் போர் தொடங்கிய எதிரியை முடித்துவிடுவதே.

நியாயமான முறையில் ஒரு சமாதானத் தீர்வு ஏற்படுவதற்கு இந்த மனோபாவம் பெருந்தடையாகின்றது.

இஸ்ரேல் இந்தநிலையில் போரைத்தொடர ஈரானுக்கு உதவுவதும் கற்பனைக்கெட்டாத செய்தியாக ஈரான் அதனை ஏற்கலாமென்பதும் போரின் விபரீதமென அறிக.

## இன்று குருபூசை

# சகலரையும் கடவுள்எனக்கூறி கடவுள் சுவாமியானுர்

இலங்கையில் ஆன்மீக நெறியை முதன் முதலில் விதைத்தவர் கடையிற்சுவாமிகளாவர். இவரின்பிரதமசிஷ்யனுக விளங்கியவர் செல்லப்பா சுவாமிகளாவர். இம்மெய்ஞ்ஞானிக்கு யோகசுவாமிகள் மறவன்புலோ குழந்தைவேற் சுவாமிகள் போன்ற ஞானிகள் சிஷ்யர்களாகத் தோன்றினுர்கள். குழந்தைவேற் சுவாமிகளின் சிஷ்யனுக விளங்கியவரே பெரியகுருநாதரெனப் போற்றப்பட்ட சின்னத்தம்பிக் குரு சுவாமிகளாவர்.

வாழையடி வாழையென இக்குருபரம்பரையிலுதித்த சின்னத்தம்பிக் குருசுவாமிகளுக்குத் தொண்ணூற்ருறு சிஷ்யர்கள் உருவாகினுர்கள். இவர்களுள் பிரதம சிஷ்யனுக விளங்கியவரே கடவுள் சுவாமிகளாவர். இவரின் இயற்பெயர் முருகுப்பிள்ளைச் சுவாமிகள் என்பதாகும். இவரின் குருபூசை இன்றுமறவன்புலோவிலுள்ள அவரின் சமாதித்தானத்தில் சுத்தசிவசமரச சன்மார்க்க சாது சங்கத்தினரால் கொண்டாடப்படுகின்றது.

### வ. குமாரசாமி

அல்வாயைத் தமது பிறப்பிடமாகக் கொண்ட சுவாமிகள் உலகமெல்லாம் தமது பிறப்பிடமெனக் கொண்டார்கள். உலகிலுள்ள ஜீவர்களெல்லாம் கடவுளின் இருப்பிடமென உணர்ந்தார்கள். எல்லோரையும் கடவுள் கடவுள் என அழைத்தார்கள். எவன் ஒருவன் எதைச் சதா நினைக்கின்ருனே அவன் அது ஆகிவிடுகின்ருன் என்ற கூற்றுக்கிணங்க சுவாமிகளும் சதா கடவுள் எண்ணமாக இருந்து கடவுளாகி மக்களாலே கடவுள் சுவாமிகளெனப் போற்றப்பட்டார்.

சுவாமிகள் முத்தித் தலமாகிய செல்வச்சந்நிதியை தமது நிரந்தர இருப்பிடமாக்கி அங்கமர்ந்திருந்து அடியார்களுக்கு அருளமுதம் வழங்கி வந்தார்.

### மௌனவிரதம்

சுவாமிகள் 1975ம் ஆண்டிலிருந்து முதன் முதலில் வாய் பேசாதிருக்கும் மௌன விரதத்தை மேற்கொண்டார்கள். முதலில் வியாழக்கிழமைகளில் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி இரண்டாண்டுகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விஸ்தரிக்கப்பட்டது. 1976ம் ஆண்டிலிருந்து நித்தியமௌன விரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். அன்று ஆரம்பிக்கப்பட்ட விரதத்தை சுவாமிகள் 24-9-80 ல் மகாசமாதி அடையும் வரையிலும் கடைப்பிடித்தார்கள்.

இவர் மௌனகுருவாக விளங்கியபோதிலும் எழுத்தின் மூலமாகவும் செய்கைகள் மூலமாகவும் அடியவர்களுக்குப் போதனை புரிந்துவந்தார்கள். சுவாமிகள் முத்தித்தலமாகிய செல்வச்சந்நிதியில் சமாதி எய்தினுர்கள். சுவாமிகளின் மிருதலிங்கம் அவரினுல் ஆறுநாட்களுக்குமுன் காட்டப்பட்ட இடமாகிய மறவன் புலோவிலுள்ள அவரின் குருநாதரின் சமாதிக்கு வலப்பக்கமாக வைக்கப்பட்டு அருளொளி வீசும் அற்புத சமாதியாக விளங்குகின்றது.

"உலக சுகம் இன்பமாகக் காட்டி துன்பமாக மாறக்கூடியது" "கடவுளைப் பரிபூரணமாக விரும்பு" "எங்கும் எதிலும் கடவுளைக் காண்" "கடவுள் ஒருவரே நித்தியப் பொருள். அவரை உறுதியாகப் பிடித்துக் கொண்டால் அமைதியும் ஆனந்தமும் அடையலாம் நீ தெய்வக் குழந்தை என்றுஉணர்வாயாகில் உன் தந்தையாகிய தெய்வத்தை உணருவாய் தந்தையாகிய தெய்வத்தை அறிந்துகொள்கிற அளவு உன்னை அவரிடத்தும் அவரை உன்னிடத்திலும் நீ

(5ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தபாற்சங்கம்

தபாற் சேவையின் பங்களிப்பானது ஒரு தனிமனிதனை மட்டும் நோக்கியதல்ல. 1505ம் ஆண்டின் ஆரம்பக்கட்டத்தில் ரைக்சிஸ் (Taxis Family) குடும்பத்தவரால் ஸ்தாபன ரீதியாக சிருஷ்டிக்கப்பட்ட அமைப்பு இன்றுவரை சமூக, பொருளாதார கலாசார அபிவிருத்திக்கு பாரியசேவை ஆற்றிவருகின்ற தென்றல் அதுமிகையாகாது. சைகைமூலமும், வாய்ச்சொல் மூலமும் ஆரம்பித்த "தொடர்பு"ச்சேவையானது 1874ம் ஆண்டுஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி பேன்நகரில் ஒரு 'பொது தபாற்சமாஜம்' உருவானதின் பின்பே துரிதகதியில் வளர்ச்சிபெற்றதெனலாம் அன்று 22நாடுகளின் பிரதிநிதிகள் கூடி ஒரு பொதுவான சங்கத்தைஉருவாக்கி இயங்குவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். 'கடிதச்சேவை' தொடர்பான சர்வதேச சட்டவிதிகளும் அன்றே உருப்பெற்றன. பின்பு சர்வதேசதபாற் காங்கிரஸ் 1878ல் பாரிஸ் நகரில் கூடியபோது பொதுச்சமாஜத்தின் பெயரை சர்வதேச தபால்சங்கம் (Universal Postal Union) என மாற்றிக் கொண்டது. போக்குவரத்து தொலைத்தொடர்புச் சாதனங்கள் பற்றிய தொழில்நுட்ப பயன்பாடு எங்கும் பயன்படுத்தப்பட்டபோதும் இன்றுவரை தபாற்சேவையின் அவசியமும் பங்களிப்பும் குறைந்துவிடவில்லை. உலகின் எந்தஒருமூலை முடுக்கில் உள்ளகுடிசை வாசலில்கூட தபாற்காரனின் மணியோசை ஒலித்துக்கொண்டிருப்பதும் அதற்கான ஒருபிரதான காரணமெனலாம்.

(5-ம் பக்கம் பார்க்க)

இன்று ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்த்தம்

## பாண்டவர்க்குத்தானு உன் கடைக்கண் பார்வை?

வல்லிபுரப் பதியதனைத் தனதாய்க் கொண்ட
வைகுந்தப் பெருமாளே மாலே இந்தத்
தொல்லுலகம் முழுவதுமே உனதென் ருலும்
தொன்முதலாய் நீவிரும்பி உறைந்த இந்த
வல்லிபுரப் பதியதனின் பெருமை தன்னை
வடித்திடவோ கவிதையிலே வார்த்தையில்லை
நல்லிதயம் தனில்தினமும் நிறுத்தி உன்னை
நாவாரப் போற்றுவதே நமக்கு இன்பம்

★ ★ ★

கடலினிலே தீர்த்தம்நீ ஆடும் காட்சி
கவினுறவே காண்பதற்காய் மக்கள் கூட்டம்
கடலதுபோல் திரண்டிருக்கும் காட்சி காணுக்
கண்ணென்ன கண்ணென்ற எண்ணம்
தோன்றும்
அடியவராய் உன்நாமம் சொல்லிச் சொல்லி
அனுதினமும் வழிபடுவோர் துயருக் கிங்கே
முடிவிலையோ முகில்வண்ணு முராரே கண்ணு
முகுந்தனெனும் முரளிதரா நந்த பாலா!

★ ★ ★

காண்டீபன் சாரதியாய் வந்தாய்; அந்தக்
காலமதில் நல்லவர்க்கே உதவி நின்ருய்!
நீண்டபல ஆண்டுகளாய் நாங்கள் இங்கே
நிந்தனைக்குட் படுவதைநீ அறியாய் தானே?
மாண்டவர்கள் மாய்பவர்கள் எல்லாம் அற்று
மனமொடிந்து போனவர்கள் கணக் கிலில்லை!
பாண்டவர்க்குத் தானுஉன் கடைக்கண் பார்வை?
பைந்தமிழர்க் கிலையோநீ பகருவாயே.

**கொற்றை. கிருஷ்ணனந்தன்**

## வல்லிபுரா வந்தெம்மை ரட்சிப்பாயே

மடியிழந்த கன்றினைப் போல் மலையலானேம்
மறியிழந்த கலையினைப்போல் மடியலானேம்
முடியிழந்த மன்னனைப்போல் முனங்கலானேம்
மூச்சிழந்த உடலினைப்போல் முடியலானேம்
குடியிழந்த குருவியைப் போல் குலையலானேம்
கோவிழந்த குடிகளைப்போல் குழையலானேம்
தடியிழந்த குருடனைப்போல் தளரலானேம்
தாயிழந்த குழந்தையைப்போல்
தனிமையானேம்
அடியிழந்த மரத்தினைப்போல் வீழலானேம்
அணியிழந்த மங்கையைப்போல் அபலையானேம்
துடியிழந்த சுருதியைப்போல் துளங்கலானேம்
துயருழந்த அன்றிலைப்போல் துடிக்கலானேம்
கொடியிழந்த தலைவனைப்போல் குமுறலானேம்
கொப்பிழந்த குட்டியைப்போல்
கொடுங்கலானேம்
வடிவிழந்த கன்னியைப்போல் வருந்தலானேம்
வல்லிபுரா வந்தெம்மை ரட்சிப்பாயே

**'ஆழ்கடலான்'**

யாழ். மாவட்டத்தில் வீடமைக்கும் திட்டம்

# இதுவரை ரூ40 லச்சம் கடனுதவி வழங்கப்பட்டது

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் 10லட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இதுவரை சுமார் 40 (நாற்பது) இலட்சம் ரூபா வீடமைப்பு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 13 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள 149 கிராமோதய சபைகளுக்கும் 1984ம் ஆண்டு 10 இலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்திற்கு உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சினால் சுமார் 60 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுள் சுமார் 40 இலட்சம் ரூபா இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, சங்கானை, தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலேயே ஆகக்கூடுதலான தொகைப்பணம் வீடமைப்பு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பத்துலட்சம் வீடுகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் 1984ம் ஆண்டிற்கு 1056 வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. ஆனால் இதுவரை 73 வீடமைப்புத்திட்டங்களே முற்றாக பூர்த்தியடைந்துள்ளன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 23 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 6 இலட்சம் ரூபாவும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 10 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 3இலட்சம் ரூபாவும், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 11 கிராமோதய சபைகளுக்கும் சமார் 3 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய்உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 09 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2இலட்சத்து 39 ஆயிர ரூபாவும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 3 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 68 ஆயிரம் ரூபாவும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 10 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2லட்சத்து 68 ஆயிரம் ரூபாவும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 9கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2இலட்சத்து 6 ஆயிரம் ரூபாவும், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 10 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2இலட்சத்து 65ஆயிரம் ரூபாவும், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 07 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 1 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாவும் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 08 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 16 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 4 இலட்சம் ரூபாவும், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 14 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 2 இலட்சத்து 87ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 19 கிராமோதய சபைகளுக்கும் சுமார் 3 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் வீடமைப்புக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## "பாதுகாப்பை உறுதிப்படுத்த மக்கள் அணிதிரள வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''தமிழ்ப் பகுதிகளில் தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், மிகக்குறைந்த அடிப்படைத் தேவைகளைப் பெற்று வாழ்வதற்கும் வாய்ப்பளிக்கும் சூழ்நிலையை உருவாக்க மக்கள் ஒன்றுதிரண்டு செயல்படவேண்டும்.''

திருநெல்வெலியில் நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில், தமிழர் விடுதலைக்கூட்டணி நிர்வாகச்செயலாளரும், முன்னாள் கோப்பாய் எம். பி. யுமான திரு. எம். ஆலாலசுந்தரம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். அரசியல், பொருளாதார, பாதுகாப்புப் பிரச்னைகளே அவை. மூன்றும் ஒன்றையொன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன. முழுமையான அரசியல் தீர்வுமூலம்தான், இந்த மூன்று பிரசனைகளுக்கும் நிரந்தரமான தீர்வுகாண முடியும்.

''அத்தகைய ஒரு அரசியல் தீர்வு ஏற்படக்கூடிய அறிகுறிகள் தென்படவில்லை.

''மாநாட்டு முடிவுகள் இந்த பிரச்னைகளைத் தீர்க்கக்கூடியதாயிருக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை, ஆகவே இந்த பிரச்னைகளின் தாக்கத்தை தமிழ் மக்கள்மீது, நீண்டகாலத்திற்கு தாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துமென்பதை நாம் அறிய வேண்டும் அத்தகைய ஒரு கடினமான சூழ்நிலையிலிந்துமக்களைகாப்பாற்றுவதற்கு ஒவ்வொரு அமைப்புகளும், தங்கள் பூழுமையான பஙகளிப்பைச்செய்யவேண்டிய காலகட்டம் தோன்றியுள்ளது

நாடும் வீடும் நம்மிரு கண்களைப் போன்றவை. வீடு சிறப்புப் பெறுமல் நாடு சிறப்புப் பெற முடியாது. வீட்டைச் சிறப்பாக்குவதற்குத்தான் நாட்டைப் பேணும் முயற்சி பல்லாண்டுகாலமாக பேணப் பட்டுவந்துள்ளது. ஆகவே நாட்டிற்கு உயிர்நாடியான வீட்டைக் காப்பாற்றும் பணியில், தனிமனிதரும் அமைப்புக்களும் முழுமையாக ஈடுபடவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

மக்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டமும், வருமானக் குறைவும் மிகப்பெரிய பாதிப்பை உண்டாக்கியுள்ளன. இடற்கைகூட எமக்கு மாறாகவே செயல்படுவதைக் கடந்த வருட நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகிறது இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை சந்திப்பதற்கு வேறு எந்தப் பிற உதவிகளையும் எதிர்பாராது சொந்தக் காலில் நின்று பணியாற்றவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமிழ்ப் பகுதியில், தமிழர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், மிகக் குறைந்த அடிப்படைத் தேவைகளைப் பெற்று வாழ்வதற்கும் வாய்ப்பளிக்கும் சூழ்நிலையை உருவாக்க மக்கள் ஒன்றுதிரண்டு செயற்படவேண்டும்.

அரசாங்கமும், அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் தான் செய்யவேண்டும் என்று மக்கள் கண்மூடி இருந்தால், நிச்சயம், இப்பிரச்னைகள் எம்மை நிரந்தர அடிமைகளாகவே ஆக்கிவிடும். ஆகவே எமது பணியை நாம் நிறைவேற்றினால் ஓரளவேனும், நிம்மதியாக வாழ்ந்து நமது மீட்சிக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். இல்லையேல், அந்த முயற்சியும். பாதியில் கைவிடவேண்டிய கட்டத்திற்குள்ளாவோம். (க)

### சகலரையும்...

[4ம் பக்கத் தொடர்ச்சி)

காண்பாய் அப்போது முடிந்த நிலையில் அவரும் நீயும் ஒன்றாகிவிடுவீர்கள்.'' ''குருவையே தெய்வமாகக்கருது'' ''குருபக்தியும் குருசேவையும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க உதவும் இருதுடுப்புக்கள் ஆகும்'' ''மனிதனுகப் பிறந்தவன் இப்பிறவியிலேயே கடவுளை அடைய முயலவேண்டும் இல்லையேல் அவன்வீணில் பிறந்தவனுகின்றுன்'' என்பவை சுவாமிகளின் திருவாக்குகளில் சிலவாகும்.

### சர்வதேச...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

1840ம் ஆண்டில் ஜெர்மன் நாட்டைச்சேர்ந்த பெருளாதார அறிஞர் [Von Herr feltt) ஒருவர் கடிதச் சேவைக்கான கட்டணங்களை தீர்மாணிப்பதில் பின்பற்றவேண்டிய பலவிடயங்களை வரையறை செய்தார்.

இவரது வாதம் சங்கத்தில் நாடுகள் ஒவ்வொன்றும் ஆற்றும் பணிக்கான கட்டனவிகிதங்களின் இணக்கம் காண பெரிதும் உதவியாக இருந்தது 1874 ஒக்டோபர் ஒன்பதாம் திகதிக்கு பின்பு இற்றைவரை இச்சங்கம் பல மாநாடுகளை கூட்டி காலத்துக்குகாலம் புதுப்புது சேவைகளை அறிமுகப்படுத்தியும், ஏற்கனவே நடைமுறையிலுள்ள வற்றை சீர்செய்தும் சமூக, அரசியல் காரணிகளால் பலவழிகளிலும் வேறுபட்ட உலகநாடுகள் அனைத்தையும் ஒரு அமைப்பின் கீழ் கொண்டுவந்தும் பணியாற்றுகிறது.

சர்வதேசதபால் சங்கம் உருவாகி இன்றுடன் 110 ஆண்டுகள் கழிந்து விட்டன.

விளையாட்டுத் துறையிலும் விமானசேவையிலும் இன்னும் பலதரப்பட்ட துறையிலும் ஆதிக்கத்தை செலுத்தும் வேறுபாடுகள் என்றும் நாடுகளுக்கிடையே ஆன தபாற் சேவையை பாதிக்காதவாறு சர்வதேச தபாற்சங்கம் ஆற்றியுள்ளசேவை மகத்தானதாகும் நிழலின் அருமை வெயிலில்தான் உணரப்படும். தபாற்சேவையின் அருமையும் ''போஸ்ற் மன்'' வராவிட்டால்தான் புரியும் அவ்வாறே தான் இச்சமாஜத்தின் பயனும் அது ஆற்றும் பணிக்கு குந்தகம் ஏற்படும் போதுதான் உணரப்படக்கூடும். எனினும் அப்பேற்பட்ட நிலை ஏற்படாதிருக்க சமாஜத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் ஒத்தாசையாக இருக்கவேண்டும் மென்பதே எமது இன்றைய பிரார்த்தனை ஆகும்.

பொன்னம்பலம் குகதாசன்

### ப. நோ. கூ. சங்க...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விபரங்களை தமக்கு உடன் அனுப்பிவைக்கும்படி பத்திரிகைகள் மூலம் கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் ஓய்வூதியம்பெற இதுவரை 300பேரை விண்ணப்பித்திருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவிக்கிறார்.

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்காதவர்கள் தொடர்ந்தும் யாழ் விளையாட்டரங்கில் பெறவிருப்பம்கொண்டுள்ளார்கள் போல் தெரிகிறதாகக் குறிப்பிட்ட அரசாங்க அதிபர் நவம்பர் மாதம் தொடக்கம் யாழ். விளையாட்டரங்கில்கூட ஓய்வூதியம் வழங்கமுடியாத நிலை ஏற்படுமென்றும் அங்கு பாதுகாப்பு அளிக்கும் வசதிகளில் தடங்கல் ஏற்படலாமென்றும் சொன்னார்.

ஆதலால் உடனடியாக மீதி 7,700 பேரும் உடனடியாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (மா)

### அல்லைப்பிட்டி...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கடத்தல் வேலையில் ஈடுபட்டிருந்ததாகச் சொல்லப்படும் படகினைத் ஹெலிகொப்டர் ஒன்று கலைத்துச் சென்று கொண்டிருந்ததாகவும் அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்

இறந்தவரின் சடலத்தை அவரின் உறவினர்கள் பின்னர் எடுத்துச்சென்று விட்டார்களாம். (மா)

### தேயிலைப் பெட்டியில்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கட்டுநாயக்கா சுங்கத்துறையைச் சேர்ந்த எம். அசோகன் எச். தேவேந்திரன் ஆகியோரே இக்காசோலையைக் கைப்பற்றினர்.

இதேவேளை நேற்று முன்தினம் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வெளிநாட்டு காசோலை கடத்தல் முயற்சியும் இங்கு முறியடிக்கப்பட்டது. இக்கடத்தலில் ஈடுபட்டவருக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

### எண்ணெய்குழாய்க்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு புளுமண்டல்வீதியில் நிகழ்ந்த இச்சம்பவத்தின் போது எண்ணெய் விநியோகக்குழாய் வெடித்திருந்தால் கொழும்பு நகரில் பெரும் தீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும், இதன் விளைவும் பயங்கரமானதாக இருந்திருக்கும் என்றும் தெரிவித்த பொலிசார் இச் சம்பவத்தில் வெடிக்காத ஒரு குண்டை பாதுகாப்புப்படையினர் கண்டெடுத்துள்ளனர் என்றும் கூறினார்

### சேதப்பட்ட...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக் கருகில் சேதமாக்கப்பட்ட நிலையில் கைவிடப் பட்டிருந்த வான், யாழ்-பொலிசாரின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்டது பிரஸ்தாப வான் 15,000ரூபா வரை சேதமாக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

வான் கல்லூரண்டாய் வெளியில் வைத்துக்கடத்தப்பட்டிருந்தது.

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுன் தினம் அதிர்ஷ்டம் பார்க்கப் பட்ட 578 இலக்க தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள்;

1-ம் பரிசு

**11 A 0583**

ரூ. 2 லட்சம்

2-ம் பரிசு

**13 Z 0942**

ரூ. 75,000

3-ம் பரிசு

**02 E 0429**

ரூ. 25,000

ரூ. 1048·20 பரிசு பெறும் 100 டிக்கட்டுகள் விபரம்:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03 | A | 0623 | 05 | A | 0893 |
| 06 | A | 0349 | 06 | A | 0379 |
| 17 | A | 0436 | 20 | A | 0968 |
| 12 | B | 0461 | 14 | B | 0507 |
| 21 | B | 0035 | 05 | C | 0170 |
| 02 | D | 0637 | 05 | D | 0411 |
| 97 | D | 0037 | 15 | D | 0491 |
| 20 | D | 0099 | 20 | D | 0877 |
| 02 | E | 0141 | 07 | E | 0489 |
| 08 | E | 0260 | 21 | E | 087[illegible] |
| 21 | E | 0892 | 01 | F | 0175 |
| 15 | F | 0699 | 16 | F | 0659 |
| 21 | G | 0099 | 03 | H | 0953 |
| 03 | H | 0982 | 09 | H | 0046 |
| 04 | J | 0625 | 06 | J | 0376 |
| 09 | J | 0488 | 20 | J | 0715 |
| 01 | K | 0257 | 04 | K | 0166 |
| 11 | K | 0862 | 15 | K | 1000 |
| 03 | L | 0427 | 11 | L | 0142 |
| 21 | L | 0028 | 02 | M | 0958 |
| 03 | M | 0854 | 04 | M | 0530 |
| 06 | M | 0779 | 09 | M | 0245 |
| 04 | N | 0783 | 05 | N | 0674 |
| 15 | N | 0753 | 01 | O | 0316 |
| 01 | O | 0645 | 03 | O | 0715 |
| 07 | O | 0127 | 07 | O | 0191 |
| 09 | O | 0691 | 22 | O | 0047 |
| 04 | P | 0829 | 05 | P | 0697 |
| 05 | Q | 0046 | 08 | Q | 0895 |
| 09 | Q | 0081 | 10 | Q | 0664 |
| 1 | Q | 0361 | 17 | Q | 0397 |
| 09 | R | 0941 | 09 | R | 0944 |
| 11 | R | 010[illegible] | 12 | R | 0624 |
| 15 | R | 0198 | 17 | R | 0199 |
| 22 | R | 0199 | 02 | S | 0852 |
| 03 | S | 0856 | 12 | S | 0673 |
| 13 | S | 0444 | 13 | S | 0750 |
| 19 | S | 0732 | 22 | S | 0347 |
| 02 | T | 0104 | 13 | T | 0716 |
| 16 | T | 0678 | 16 | T | 0768 |
| 01 | U | 0270 | 03 | U | 0904 |
| 16 | U | 0287 | 05 | V | 0391 |
| 11 | V | 0580 | 11 | V | 0871 |
| 14 | V | 0375 | 03 | W | 0431 |
| 05 | W | 0246 | 06 | W | 0345 |
| 09 | W | 0642 | 09 | W | 0998 |
| 01 | X | 0441 | 11 | X | 0324 |
| 11 | X | 0447 | 06 | Y | 0359 |
| 08 | Y | 0507 | 10 | Y | 0241 |
| 11 | Y | 0715 | 09 | Z | 0723 |
| 12 | Z | 0232 | | | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியது)

கனடா செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும்,
BERLIN செல்ல விமானச்சீட்டுக்களுக்கும்
உடனடியாகப் பதிவு செய்வதற்கும்,
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

# செய்திச்சிதறல்

## ஒய்வூதியம் காசோலையாக வழங்கப்படும்

(கல்வியங்காடு)

யாழ். கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும் ஒய்வூதியம் காசோலையாகவே கொடுக்கப்படும்.

இம்மாதம் தொடக்கம் யாழ். கல்வித் திணைக்களத்தில் தற்காலிக ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு காசோலையே வழங்கப்படும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை சகல ஒய்வூதியம் பெறுபவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இவ்ஒய்வூதிய காசோலைகள் ஒவ்வொரு மாதமும் 15-ம் திகதி இத்திணைக்களத்தில்வழங்கப்படும். 15ம் திகதி விடுமுறை தினமாக அமையின் அடுத்து வரும் வேலை நாட்களில் பெறுக்கொள்ள முடியும்.

### பரீட்சை

(பண்டத்தரிப்பு)

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற உணவுபோஷாக்கு பயிற்சியில் கலந்துகொண்டு பயிற்சிபெற்ற 50 யுவதிகளுக்கான பரீட்சை நாளை பண்ணுகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எம். பாலசிங்கம் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

### பொலிசார் நடத்திய நவராத்திரி விழா

(மாவிட்டபுரம்)

இன, மத வேறுபாடின்றி காங்கேசன்துறை பொலிசார் நவராத்திரி விழாவை கொண்டாடினர்கள்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகஉள்ள ஞானவைரவர் ஆலயத்தில் விசேடமாக தமிழ்ப் பொலிசார் சங்கத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட நவராத்திரி சரஸ்வதி பூசையில் இனமத வேறுபாடற்றமுறையில் சகல பொலிசாரும், உயர்அதிகாரிகளும் கலந்துகொண்டனர்

இதேவேளை காங்கேசன்துறை சிமெந்து கூட்டுஸ்தாபனம், லங்கா சிமெந்து நிறுவனம் ஆகியவற்றில் ஊழியர்களும் இன,மத வேறுபாடின்றி சகல பிரிவுகளிலும் சரஸ்வதி பூசை கொண்டாடினர்கள்.

### "கிராம மட்டத்தில் பேணவேண்டும்"

(மாவிட்டபுரம்)

''கிராம மட்டத்தில் சுகாதாரம் பேணப்படவேண்டும்; அதற்காகவே இப்படியான நடமாடும் சிகிச்சை நிலையம் செயல்படுத்தப்படுகிறது'

இவ்வாறு காங்கேசன்துறை சுகாதார அதிகாரி திரு தெய்வேந்திரம் கட்டுவன் மேற்கு நடமாடுப்சிகிச்சைநிலையத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

யாழ் திட்டமிடல் பகுதியினரின் ஆதரவுடன் காங்கேசன்துறை சுகாதாரப் பகுதியினர் இதனை ஒழுங்கு செய்தனர்.

### அரிசிஆலை நிர்வாகிகள் பதட்டம்

(வவனியா)

வவனியா நகரில் அண்மையில் அரிசி ஆலைகளில் நடந்த சம்பவங்கள் இங்குள்ள பிரபல அரிசிஆலை நிர்வாகிகள் மத்தியில் பெரும் கவலையினை அளித்துள்ளது.

அரிசி ஆலையாளர்கள் இப்போது அச்சத்துடன் பீதி நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றனர்.

### சத்துணவு வாரம்

(கோப்பாய்)

நவம்பர்மாத முற்பகுதியில் சத்துணவு வாரம் கொண்டாடப்படும். இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை பகுதியினர் செய்துவருகின்றனர்.

### ஒத்திவைப்பு

(மட்டுவில்)

தென்மராட்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறவிருந்த மென்பந்து கிரிக்கெட் போட்டியை மழை காரணமாக அடுத்த மாதம் முதல் வாரத்திற்கு ஒத்திவைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அதிகாரி திரு. சி. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

### வவனியாவிலும் எளிமையாக....

(வவனியா)

வவனியாவில் இத்தடவை எளிமையானமுறையில் நவராத்திரிவிழா இடம்பெற்றது.

இங்குள்ள அநேகமான அரசாங்க காரியாலயங்களில் சரஸ்வதிபூசை நடந்தது. அனைத்து பாடசாலைகளிலும் சரஸ்வதி பூசை மிகவும் அமைதியாகவே நடந்தேறியது.

### வெளிநாட்டிலிருந்து மரக்கறி விதை

(கோப்பாய்)

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட், கரட் வகைகளைப் பெற்று உற்பத்தியில் ஈடுபடவிருக்கும் விவசாயிகள் தமக்கு தேவையான விதைகளை கமநல சேவை நிலையங்களில் முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இந்த வருடம் வெளிநாட்டில் இருந்து விதைகளை இறக்குமதிசெய்வதற்கான அனுமதி தனியார் துறையினருக்கும் வழங்கப்பட்டிருப்பதால் தனியார் துறையிடம் இருந்து தேவையான அளவு பீற்றூட், கரட்விதைகளைபெற்று வழங்குவதற்கு கமநலசேவை நிலையங்கள் ஏற்பாடுசெய்யவிருக்கின்றது.

### பதில் அதிகாரி

(கோப்பாய்)

கோப்பாய் கல்வி வட்டாரப் பதில் வட்டாரக் கல்வி அதிகாரியாக திரு கே. ஈஸ்வரபாதம் கடமைபுரிகின்ருர்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ஏ வி. தங்கராசா லீவில் சென்றிருப்பதால் உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஈஸ்வரபாதம் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் கடமையாற்றுகின்ருர்.

### பொதுமக்கள் பாவனைக்கு

(கொழும்புத்துறை)

யாழ் நவீன சந்தையிலுள்ள மலசலகூடம் பொதுமக்களின் பாவனைக்காக எந்தநேரமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

சிலவேளைகளில் இம் மலசலகூடம் சுத்திகரிப்பு வேலைக்காக மூடப்பட்டிருக்கும் என்றும் அப்போது மாற்றுமலசலகூடம் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்றும தெரிவிக்கப்பட்டது.

யாழ் நவீனசந்தையிலுள்ள மலசலகூடம் மூடப்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி
திகதி—23(09-10-1984)
வாரம்—செவ்வாய்
திதி—பூரணை பின் இரவு 5-58வரை
நக்ஷத்திரம்—உத்திரட்டாதி பிற்பகல் 5-35வரை

மேடம்:- கற்றதனுல் பயன் இன்று கைமேல் கிடைக்கும் நுட்பமான வேலைகளில் ஈடுபடுபவர்கள் போற்றப்படுவார்கள்.

இடபம்:- சகோதரவழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும் உள் வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும் உஷராக இருக்க வேண்டும்.

மிதுனம்:- தாய் வழித்தனமும் தாராளமாகக்கிடைக்கும் எதிர்கால வாழ்க்கைக்கான புதிய திட்டத்தை உருவாக்குவீர்.

கடகம்:- தெளிந்த மனமும் தெய்வ சிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

சிங்கம்:- வாய்வுக் கோளாறினுல் வேதனைப்படுவீர்கள் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

கன்னி:- களஸ்திரவழியால் பொருள் வரவிற்கு இடம்ஏற்படும் பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும் கண்ணியமான தினம்.

துலாம்:- ஏக்கத்தின் சாயல் தாக்கும் எதிர்பாரத விதமான சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும் நிதானமும் வேண்டும்

விருச்சிகம்:- புதிய பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு இன்று நலம் மாணவர்களாயின் கல்வியில் அதிக ஆர்வம் பிறக்கும் பிதாவழி சுகம் உண்டு.

தனுசு:- கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் எதையும் துரிதமாகச் செய்யின் வெற்றி காண்பீர் தெய்வத்தின் துணையுண்டு.

மகரம்:- எதிர்பாரத பொருள் வரவும் பொது சன மதிப்பும் உண்டு சுப காரியங்களில் பணச் செலவு ஏற்படும்

கும்பம்:- எதிலும் தடுயாற்றநிலை ஏற்படும் குசுகுசுப் பேச்சுக்கள் மூலம் அவதூறுகள்வரலாம் உடல் நலத்தையும் பேணிக் கொள்ளவும்.

மீனம்:- குருடப்பார்வை உங்களை வட்டமிடும் உடல் பாதிக்கப்படலாம். பகைமை உங்களை வேதனையில்ஆழ்த்தும் சுகாதாரம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## மே. ஜேர்மன் நிருபர் மாதகல் நிலைமை அறிந்தார்

[பண்டத்தரிப்பு]

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பெண் பத்திரிகை நிருபர் ஒருவர் மாதகல் கிராமத்திற்கு விஜயம் செய்து மாதகல்துறை முகப்பகுதியில் எரிந்தநிலையில் காணப்பட்ட மீன்பிடிப் படகையும், குண்டுகள் வந்து விழுந்த இடங்களையும் நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றுள்ளார்.

மாதகல் கடற்றெழில் விரிவாக்க சேவை சங்கத்தினரையும் அவர் பேட்டிகண்டு விபரங்களை அறிந்து கொண்டார்,

### புரட்டாதி கடைசிச் சனி

(பண்டத்தரிப்பு)

புரட்டாதி மாத கடைசி சனிக்கிழமை விரதத்தை முன்னிட்டு எதிர்வரும் 13ம் திகதி சனிக்கிழமையன்று கீரிமலை ஸ்ரீநகுலேஸ்வரர் ஆலயத்தில் எண்ணெய் எரிப்பதற்கான ஒழுங்குகள் பக்தர்களுக்குசிறப்பானமுறையில் செய்யப்பட்டுள்ளன.

### தலைவராகத் தெரிவானர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனந்தபுரம் கிராம அபிவிருத்திச்சங்க தலைவராக திரு. முத்துப்பிச்சை தெரிவானர்.

சங்கபுனரமைப்புக் கூட்டம் கிளிநொச்சிப்பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுமாரன் தலைமையில் சங்கப்பணிமனையில் நடைபெற்றது.

கிராமசேவகர் எஸ். தனபாலசிங்கம் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டார்.

### பண்டத்தரிப்பில் கோப்பிச் செய்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பகுதிக்கு 250 கோப்பிக்கன்றுகளை விநியோகிக்க யாழ். மாவட்ட உதவி விவசாயப்பணிப்பாளர் திரு.எஸ். கிருஷ்ணபிள்ளை நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

பண்டத்தரிப்பில் ஏற்கனவே பரீட்சார்த்தமாக சிலவீடுகளில் நடத்தப்பட்ட கோப்பிக்கன்றுகள் காய்த்து பயன் கொடுத்துள்ளதை பண்டத்தரிப்பு விவசாயவிஸ்தரிப்பு அலுவலர் திரு வை பாலகிருஷ்ணன், தொல்புரம் விவசாய போதனுசிரியர் திரு ஜி ரி. சோமநாதர் ஆகியோர் யாழ் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவந்ததை அடுத்து உதவி விவசாயபணிப்பாளர் நேரடியாக இங்குவந்து பார்வையிட்டார். இதனை தொடர்ந்து இப்பகுதியில் 250 கோப்பிக்கன்றுகளை பேராதனை விவசாயப் பண்ணையிலிருந்து தருவித்து வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

### 40 ஆண்டுகால ஆசிரிய சேவை

திருமதி நாகரத்தினம் இராசரத்தினம் கடந்த ஏழாண்டு காலமாக காக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராகப்பணியாற்றி தமது அறுபதாவது வயதில் அண்மையில் ஓய்வுபெற்ருர். இவர் நாற்பது ஆண்டு ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். இவரது சேவைக்காக கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சேவை நலன்பாராட்டுவிழா வொன்று எடுத்து கௌரவித்துள்ளனர்.

திருமதி இராசரத்தினம் நயினுதீவில் பிறந்து மலையகம், கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயம் முதலியவற்றில் கடமையாற்றியபின் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கடமையாற்றினர். இவர் புலமைப்பரிசிலுக்கான பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவித்து நல்லூர் கல்வி வட்டாரத்தில் தனிப்பெரும் சாதனையை நிலைநாட்டினர் தமது அறுபதாவது வயதில் ஓய்வுபெறும் தருணத்திலும் சுறுசுறுப்பு இவரிடம் காணக்கிடக்கிறது பசிநோக்காது கருமமேகண்ணுயுடையவர். பாடசாலையில் கற்பிக்கும்பொழுதும் ஆசிரியர்களிடம் அளவளாவும்பொழுது நகைச்சுவை சிந்துவார் ''மாணவர்கள் கவலையைப் போக்கும் அருமருந்து'' என்று அடிக்கடி கூறுவர்.

பாராட்டுவிழா வைபவத்தில் திருமதி திலகா தில்லைநாதன் வாழ்த்துமடலை வாசித்தளித்தார் இவரின் சேவையைப் பாராட்டி அதிபர் திரு ஆ குருசாமி, ஆசிரியர்கள் திருமதி அன்ரனிராஜ்,திருமதி செல்வராசா, திருமதி அம்பலம், திரு மு ஆறுமுகம் ஆகியோர் பேசினர் உபஅதிபர் திருமதி ம. கணபதிப்பிள்ளை நன்றியுரை வழங்கினர்

எம். ஆறுமுகம்

## ரூபவாஹினி

மாலை
5-30 'மைட்டி மௌஸ், (ஆங்கிலம்)
6-00 சிறுவர் நாடகம் (சிங்களம்)
6-30 'நான்உங்கள்தோழன், உள்ளூர்த் தமிழ்த் திரைப் படம் பாகம்-2
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 பௌத்தமத பேச்சுகள்
7-25 இளைஞர் விவகாரம்
7-45 'திருகோணமலை, (விவரணச் சித்திரம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 பௌத்த நிகழ்ச்சி
9-00 பௌத்த நிகழ்ச்சி
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 பௌத்த நிகழ்ச்சி
10-15 பௌத்த பேச்சு (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 பௌத்த நிகழ்ச்சி
11-45 நிகழ்ச்சிகள் முடிவு

### இன்று

[யாழ்ப்பாணம்]

இணுவில் அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய திருவிளக்குப்பூஜை இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது,

இதனையொட்டி திருமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்புச் சொற்பொழிவும், கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன.

### வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி தெற்கு ஸ்ரீமகா விஷ்ணு சனசமூக நிலையத்தினர் விஜயதசமியன்று வாணிவிழாவை அமைதியாகக் கொண்டாடினர்கள்.

இந்நிலையத்திற்கு தொழிலதிபர் திரு. க. கனகராசா பலவகையான மரக்கன்றுகளையும் பெறுமதி மிக்க நூல்களையும் அன்பளிப்புச் செய்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர்

### திடீர் பரிசோதனைக்குழு முற்றுகை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமப்புற பாடசாலைகளில் கல்வித் திணைக்களதின் திடீர் பரிசோதனைக் குழுவின் முற்றுகை தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இரு குழுக்களாக செயல்படும் இத் திடீர் பரிசோதனைக் குழுவினர் ஒரே தினத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பாடாாலைகளில் திடீர் முற்றுகையிடுவதாக கூறப்படுகிறது

### ஈரானுக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முஜாஹிதீன் இயக்கப் பேச்சாளர் ஒருவர், இஸ்ரேலிய ஆயுதங்கள் மே ஜெர்மனின் பிராங்போர்ட் விமானநிலைய மூடாகவே ஈரானுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என்று தெரிவித்தார். கூடவே இஸ்ரேலிய விமானங்கள் கொண்டுவந்த ஆயுதங்களைப் பெற ஈரானிய அரசு சரக்கு விமானமொன்றையும் அதனுடன் சேர்த்து பயணிகள் விமானமொன்றையும் பிராங்போர்ட்டுக்கு அனுப்பிவைத்ததாகத் தெரிவித்தார்.

பிராங்போர்ட் விமானநிலையத்தின் ஒதுக்குப்புறமான பகுதியிலேயே கடந்த ஏப்ரலில் இஸ்ரேலிய ஆயுதங்கள் ஈரானிய விமானங்களில் ஏற்றப்பட்டனவென்றும் அப்பேச்சாளர் கூறினர்.

ஆனுல் ஈரனிய அரசாங்கம் இச்குற்றச்சாட்டுகள் யாவற்றையும் பூரணமாக மறுத்துள்ளது. (கி)

# மீண்டும் அமுலுக்கு வரும் ஆசிரிய கலாசாலை திட்டம்!

(மட்டக்களப்பு)
கல்வியமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் ... ல்விக் கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்களை கல்வியமைச்சு க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடமிருந்து கோரியுள்ளது.

ஆசிரியர் நியமனத்திற்கு முன்பு பயிற்சி வழங்கல் திட்டத்தின் கீழ் கோரப்பட்டுள்ள இப்பயிற்சித் திட்டம் மூன்று வருடத்திற்கு ஆசிரியர் கலாசாலை ஒன்றில் வழங்கப்படும். இதில் ஒருவருடப்பயிற்சி பாடசாலை உள்ளகப் பயிற்சியாகும்.

இப்பயிற்சியில் ஆரம்பக் கல்வி, கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், உடற்கல்வி என்பன வழங்கப்படும்.

பயிற்சியின் பின்பு சித்தி பெற்றால் ஆசிரிய டிப்ளோமா பட்டம் பெறத் தகுதி பெறுவார்கள்.

பயிற்சியின் பின்பு மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், வவனியா. முல்லைத்தீவு, திருமலை உட்பட 18 நிர்வாக மாவட்டப் பாடசாலை ஒன்றில் நியமனம் பெறுவார்கள். பயிற்றப்பட்ட ஆசிரியர் சம்பளம் பெறுவார்கள். பயிற்சிக்காலத்தில் இலவச உணவு, தங்குமிடம் அல்லது 600 ரூபாய் அலவன்ஸ் வழங்கப்படும்.

விண்ணப்பதாரி க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி பெறவேண்டும். 17-22 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும். திருமணம் செய்தவராக இருத்தல் கூடாது.

இவர்களில் தமிழ் விண்ணப்பதாரிகள் ஆங்கில நெறிக்கு மட்டும் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்பு அனுப்பவேண்டும்.

ஏனைய பாடநெறிகளுக்கு அதற்குரிய கலாசாலை நிறுவிய பின்னரே அனுப்பமுடியும்


**மனோகரா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15.
ரஜனிகாந்த் சௌகார்ஜானகி **நீ**
தீபாவளி வெளியீடாக கே. பாலசந்தரின்
**பூவிலங்கு**

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி, பத்மினி நடித்த
**நான் வணங்கும் தெய்வம்**
புதிய பிரதி

**சாந்தி** (யாழ்நகர்)
10-30—2-30
சிவாஜி-கே. ஆர். விஜயா
**சத்யசுந்தரம்**
(கலர் - புதிய பிரதி)

முதல்தர 'திகில்' படம்
**றீகல்** [யாழ் நகர்]
10 முதல்-(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்)
10-30, 2-15, 4-30, 6-30
VISITING HOURS
விறுவிறுப்புடன் கூடிய திகிலூட்டி திடுக்கிட வைக்கும் இப்படத்தை இருதயம் பலவீனமானவர்கள் பார்ப்பதை தவிர்க்கவும்.
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்.

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30 — 6-45
Every lovers should see this film!
Willie games.....
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 6-15
சிவாஜி-விஜயா
**ஊரும் உறவும்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-15,
HEAVEN'S GATE
(adults only).

**வின்ஸர்** [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30 6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
**"BIG BOSS"**
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)

**போயாதினத்தையொட்டி இன்று சினிமா காட்சியில்லை**


## "தமிழ் பிள்ளைகளின் கல்விவளர்ச்சி கருதி
# கல்வி அபிவிருத்திச்சபை ஏற்படுத்தப்பட வேண்டும்"

(மானிப்பாய்)
''தமிழ் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள கல்விமான்களைக் கொண்ட கல்வி அபிவிருத்திச்சபை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்'' என இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க யாழ். மாவட்ட செயலாளர் திரு வே சி.சிவபாலசிங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேலணைக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து உரை நிகழ்த்துகையிலேயே திரு சிவபாலசிங்கம் மேற்படி கருத்தினை வெளியிட்டார்.

மேற்படி வருடாந்தக் கூட்டம் ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலையில் திரு மைக்கல் விஜயன் தலைமையில் நடைபெற்றது.

திரு சிவபாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில்; ''ஆசிரியராயிருந்து அதிகாரிகளாக மாறிய பலர் ஆசிரியர் விவகாரங்களில் அக்கறையில்லாத நிலைமை நிலவுவது முற்றாக நீங்கவேண்டுமெனவும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அனைத்துத் தமிழாசிரியர்களின் நலனிலும் அக்கறை கொண்டு உழைத்து வருவதாகவும், ஆசிரியர்கள் தமது பிரச்னைகளை கிளைசங்கங்கள்மூலம் மாவட்ட சங்க நிர்வாகிகளுக்கு அறிவித்து தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

''கடன் வழங்கு சபை தற்போது அங்கத்தவர் கடன் விண்ணப்பங்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து நிவாரணம் வழங்கிவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சங்கத்தின் யாழ். மாவட்ட பிரசாரச் செயலாளர் திரு ந. சிவபாதம்பேசுகையில், 'சந்தா அதிகரிப்பால் அங்கத்தவர்களாகச் சேராது, ஒதுங்கியிராது, அங்கத்தவராகச் சேர்ந்து சங்கத்தைப் பலப்படுத்த ஒத்துழைப்புத்தர முன்வரவேண்டுமெனவும், புதிய சம்பள அறிக்கையை ஆசிரியர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்களென்றும், இதனை விரைவில் வெளியிடுவது கல்வி அமைச்சின் கடமை என்றும் கூறினார்.

சங்கத்தின் யாழ். மாவட்ட பொருளாளர் திரு ஆ.பொ. குலசிங்கம் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

### ரூ.40 ஆயிரம் உதவி

(சித்தன்கேணி)
கடந்த வருடம் பெய்த பேய் மழையினால் வீடுகளை இழந்தவர்களுக்கு வெள்ள நிவாரணமாக வலி-காமம் மேற்குஉதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்குசுமார் நாற்பது ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

### வாணி விழா

(மட்டுவில்)
சாவகச்சேரி குடி தண்ணீர் விநியோக திட்டத்தில் தேசிய நீர்வளசபை அமெரிக்கறாலின் தாபனம் இலங்கை சமக் கோண் தாபனமும் சேர்ந்து வாணி விழாவைசாவகச்சேரில் சிறப்பாக கொண்டாடின.

## இன்று 'பாப்பாப்பா' வெளியீடு

[யாழ்ப்பாணம்]
யாழ்.இலக்கிய வட்டம் நடத்தும் கல்வயல் வே.குமாரசாமி எழுதிய 'பாப்பாப்பா' கவிதை நூல் அறிமுக விழா யாழ்.திறந்த வெளி அரங்க சதுக்கத்தில் இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ்.இலக்கியவட்டத்தலைவர் திரு.சு. சபாரத்தினம் (சசிபாரதி) தலைமையில் நடைபெறவுள்ளது.

அறிமுகவுரையை செம்பியன் செல்வனும் ஆய்வுரையை கவிஞர் காரை.செ.சுந்தரம் பிள்ளையும், மயிலங்கூடலூர் பி.நடராஜனும்நிகழ்த்துவார்கள் தொழிலதிபர் திரு. க.கனகராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொள்வார்.



## சார்ஜண்டாக பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டெட்டின் பாதுகாப்பு ஊழியர் திரு.கே. கலையழகன் ... காப்புச் சேவையின் சார்ஜண்டாகப்பதவி உயர்வு பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிப்பழைய மாணவனை இவர் இக் கல்லூரிப் பொலிஸ் படைபயில் குழு சார்ஜண்டாகவும் பணிபுரிந்தவர் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் நடந்த பொலிஸ் படை பயில் குழு பாசறையில் இவர் சிறந்த கமாண்டருக்கான விருது பெற்றவர்என்பது குறிப்பிடத்தக்கது.

கரவெட்டியைப் பிறப்பிடமாக கொண்ட இவர் ஆரம்பக் கல்வியை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பெற்றார் இவர்யாழ்ப்பாணம் ஜொலிஸ் ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அங்கத்தவருமாவார். (கி)



## இளைப்பாறிய அதிபர்

முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல் கல்வித்துறையில் சேவையாற்றிய ஆசான் திரு. வயித்திலிங்கம் ஆறுமுகராசா சென்ற 29ம் திகதியுடன் இளைப்பாறினார். அதிபர்கள் வட்டாரத்தில் மிகவும் மதிப்பான இடத்தையும், மற்றையோரிடத்தில் அன்பையும் சம்பாதித்த இவரின் சாணக்கியமும், ஆங்கில மொழியாற்றலும் குறிப்பிடத்தக்கவை. லண்டன் பட்டதாரியான திரு ஆறுமுகராஜா தமது ஆசிரியசேவையை இன்று யாழ்பல்கலைக் கழகமெனத்திகழும், பரமேஸ்வராக்கல்லூரியிலே தொடங்கியவர். 65 ஆம் ஆண்டுவரை அங்கு கடமையாற்றி காலஞ்சென்ற சு. நடேசபிள்ளை திரு. என். சிவபாதசுந்தரம் ஆகியோரின் ஆசிரியகுழுவில் சிறப்பிடம் வகித்தவர்.

1966 இல் கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்று, அங்கு ஆங்கிலம் கற்பித்தல் திறமையால் அகில இலங்கை ஆங்கிலமொழிப் போட்டிகளில் இப்பாடசாலை முன்னணியில் நிற்க வழிவகுத்தார், பின் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்துக்கு வந்து அங்குள்ள பெற்றோர் நலன்விரும்பிகளின் ஆதரவை நிறையத்திரட்டிய அதிபர் திரு ஆறுமுகராசாவின் முயற்சியால் பெரிய பாடசாலைக் கட்டிடங்கள் உருவாகின. 1974—1984 வரை மெய்கண்டான் மகா வித்தியாலயமெனப்படும் பள்ளியில் பண்ணாகத்திலும், அராலி இந்துக்கல்லூரியிலும் அதிபராக இருந்ததைஅடுத்து, 1977ல் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபராக பதவியேற்றார்.

எல்லா பாடசாலைகளிலும் தன்னலமற்ற கலவரமற்ற முயற்சியால் கல்வியுயர வழிகாட்டிய அதிபர் திரு. ஆறுமுகராசா கரம்பொன் இந்து மாமன்றம், மானிப்பாய் இந்துசங்கங்களின் தலைவராகவும், அமைப்பாளராகவும் விளங்குபவர். சிறந்த தத்துவ சமய ஆசானுகவும், ஆங்கிலப் பாண்டித்திய முடையவராகவும் திகழும் இவரின் பாரியாரும் இணுவில் சைவப் பிரகாச மகாவித்தியால அதிபராவார். அதிபர் ஆறுமுகராஜாவின் சிறப்பானபணி ஆசிரிய உலகத்துக்கே ஒரு உதாரணமாக அமையட்டும்.

திரு. தயா சின்னத்தம்பி,
பிரிவுபசாரசபை.

# வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நிதி நிறுத்தம்
## பரு. பிரஜைகள்குழு கண்டனம்

[புலோலி]
வடக்குகிழக்கு பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்தி அபிவிருத்தி நிதியினை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குச் செலவிட அரசாங்கம் தீர்மானித்திருப்பதற்கு பருத்தித்துறை பிரஜைகள்குழு கண்டனம் தெரிவித்துள்ளது

பருத்தித்துறை பிரஜைகள் குழுக்கூட்டம் பருத்தித்துறை கலா மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

''அண்மையில்தீக்கிரையாக்கப்பட்ட பருத்தித்துறை மக்கள் சந்தையில் உள்ள பருத்தித்துறைநகரசபைக்குச் சொந்தமான கடைகளை உடன்திருத்திக் கொடுக்க வேண்டும் அல்லது கடைச் சொந்தக்காரர்களைக் கடைகளைத் திருத்த அனுமதியளிக்க வேண்டும்.

''பருத்தித்துறையில் தீக்கிரையாக்கப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றிய ஊழியர்கள் வேலை இழந்து சீவியத்திற்கு கஷ்டப்பட்டு வருகின்றனர். இவர்களது பிரச்னைகளைத் தீர்க்கவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்றசினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 6-2 கோல்களால் வெற்றி பெற்றது.

### சென். அன்ரனிஸ் வெற்றி

பாஷையூர் சென்.அன்ரனிஸ் கழகத்துக்கும், சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். அன்ரனிஸ் கழகம் 5-2 கோல்களால் வெற்றி பெற்றது.

இவ்விருபோட்டிகளும்சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

### நாளையும் போட்டி

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், திருநெல்வேலி வை எம். எச்.ஏ. கழகத்துக்குமிடையில் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டி நாளை சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (வி)

## யாருடையது?

நீர்கொழும்பு கடற்கரைவீதியைச் சேர்ந்த செல்வி அனுராதா தில்லைநாதனின் அடையாள அட்டையையும், ஒரு தொகைப் பணத்தினையும் திரு. ப. இராசரத்தினமும், குருநகர் ...டவிற்வீதியைச் சேர்ந்த திரு. முருகேசு திருநாவுக்கரசு சிறிதரனின் அடையாள அட்டையை திரு. தி. இராஜேஸ்வரனும், வேலணை கிழக்கைச் சேர்ந்த திரு. கந்தையா சோமநாதபிள்ளையின் அடையாள அட்டையை திரு. யோ.சாந்தகுமாரும், சுன்னாகம் இலங்கை வங்கி 289ம் இலக்கக் கணக்குக்குரிய காசோலையை திரு க. துரைசிங்கமும், திரு கதிரமலை சத்தியநாதராஜாவின் பிறப்பு பதிவுக்குறிப்பை திரு. எம்.அக்பரும் கண்டு எடுதது ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## பொதுக்கூட்டம்

(மானிப்பாய்)
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு. எஸ். கே.வணசிங்கா தலைமையில் நடைபெற்றபோது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தை எதிர் வரும் டிசம்பர் மாதம் 27ம் திகதி நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

# ப. நோ. கூ. சங்கங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

## மகாநாட்டில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

''அந்தந்த பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், இயக்குநர், பொதுச் சபை உறுப்பினர், ஊழியர், சங்கத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்'' என்று யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் நடத்த மாநாட்டில் யாழ். மாவட்ட ப. நோ. சங்கத்தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

சிரேஷ்டபொலிஸ் அதிபரும், இணைப்பு அதிகாரியுமான திரு. எஸ் ஜி. குணவர்த்தன இம்மாநாட்டைக் கூட்டியிருந்தார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட ப. நோ. கூ. ச. தலைவர்கள், தங்களை எதிர் நோக்கியுள்ள கஷ்டங்களை எடுத்துக்கூறினர்

சங்கங்களில் கொள்ளை நடப்பதால், கள்ளச்சந்தை வியாபாரிகள் அதிகரிப்பதுடன், பாவனைப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு, பொருட்களின் விலைகளும், அதிகரிக்குமென்றும். இதனால் ஏழைமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப் பட்டதாம்.

சங்கத்தில் பணம், வைத்திருக்கும்போதும், பணத்தை கொண்டு செல்லும்போதும் எடுக்கவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி தலைவர்களுக்கு விரிவாகவிளக்கம் அளிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

யாழ். மாவட்டத்தில் கொள்ளை நடைபெற்ற சங்கங்கள், கொள்ளைபோன பணங்கள் பற்றியபட்டியல் ஒன்றும், தலைவர்களுக்கு வழங்கப்பட்டதாக தெரியவருகிறது.

# "கடத்தப்பட்ட வாகனத்தை திருப்பி ஒப்படைக்கவும்"

## மின்சார சபையினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்றும் திகதி இனந் தெரியாதவர்களால் கடத்தப்பட்ட இலங்கை மின்சாரசபையின் காங்கேசன் துறை சாலைக்கு சொந்தமான வாகனம் இது வரை கிடைக்காததால் இப் பகுதிகளின் மின்சாரவேலைகளைக் கவனிக்க முடியாமல் இருப்பதாக. தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் ஏற்படும் மின் தடைகளை அகற்றும் உபகரணங்களை கொண்டு செல்வதும் மட்டுமன்றி தூண்களில் ஏறி வேலை செய்யும் ஊழியர்களுக்கு இந்த வாகனம் பாதுகாப்பளித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக்கஷ்ட நிலையை கருத்தில் கொண்டு இதற்குப் பொறுப்பானவர்கள் வாகனத்தை திருப்பித் தருமாறு சாலைப் பொறியியலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார் இந்த வாகனம் எங்கேனும் அனுதரவாகக் கிடந்தால்சபைக்கு அறிவிக்கு மாறும் அவர் கேட்டுள்ளார்.

பண்டத்தரிப்பில் வைத்து 29ஸ்ரீ4029 இலக்கங் கொண்ட இந்த வாகனம் கடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## மரணஅறிவித்தல்

### இளையதம்பி செல்லத்துரை

(முன்னாள் ஆசிரியர்)

ஏழாலை வடக்கைச் சேர்ந்த செட்டிக்குளம் வாசியான முன்னாள் ஆசிரியர் இளையதம்பி செல்லத்துரை காலமானார். இவர் திருமதி பர்வதம் (ஆசிரியை முகத்தான் குளம் செட்டிக்குளம் அ. த. க. பாடசாலை) அவர்களின் கணவரும், செல்வன் திருச்செல்வநாதன், திருச்செல்வகுமாரி (ஆசிரியை, அரபா முஸ்லிம் மகாவித்தியாலயம், மாதிப்பொல) ஆகியோரின் தந்தையுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று (9-10-84) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஏழாலையில் நடைபெறும்.

116

## மரணஅறிவித்தல்

### திரு. சுப்பிரமணியம் செல்வஞானபிள்ளை

உரும்பராய் வடக்கைப் பிறப்பிடமாகக்கொண்டவர், கொழும்பு குடி யற்ற வெளியேற்ற தலைமைக்காரியாலயத்தில் லிகிதராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற சுப்பிரமணியம் செல்வஞானபிள்ளை 8-10-84ல் காலமானார். இவர் உரும்பராய் கிழக்கு, காலம்சென்ற, திரு. திருமதி அருணசலம் செல்லப்பாவின் மருமகனுமாவார். இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், கங்காதேவி, கோகழிநாதன் (இலங்கை உரக்கூட்டுத் தாபனம், கிளிநொச்சி, வள்ளிவடவைநாயகி, உத்தமி உமையாள், சிவசத்தி ஆகியோரின் அன்புத் தந்தையும், நெல்சந்தைப்பத்தும் சபை களஞ்சியப் பொறுப்பாளராகக் கடமையாற்றி அண்மையில் காலமான த. பரமசிவம் அவர்களின் மருமனும் ஆவார் அருள்நம்பி, அருள்பரன், அருள்வாணி, அருள்ஈசன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள். இன்று 9-10-84 செவ்வாய்க்கிழமை அன்னரது இல்லத்தில் நடைபெற்று தகனம்செய்வதற்காக பிற்பகல் 3-00 மணிச்கு உரும்பராய் வடக்கு இருளன் மயானத்துக்கு அன்னாரின் பூதவுடல் எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.**

உரும்பராய் வடக்கு,
உரும்பராய்

117

## பத்திரிகை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடரப்பட்டுள்ள வழக்கு மீண்டும் எதிர்வரும் 25-ம் திகதி விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கு நேற்று கொழும்பு மேலதிக நீதவான் திரு திலக்தாப்ரு முன்னிலையில் அழைக்கப்பட்ட பொழுது குறித்த வழக்கை விசாரிக்க இந்த நீதிமன்றத்துக்கு சட்ட உரிமையிருக்கின்றதா என்ற பிரச்னையை டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹேமந்தவர்ண குலசூரியா கிளப்பினார்.

குறித்த செய்தி பிரபலமான பல பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கின்றது என்றும் ஆனால் ஒருசில பத்திரிகைகள் மீது மாத்திரமே வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது என்றும் நாட்டின் சிலபகுதிகளில் அச்செய்தி வெளிவருவதை விரும்பாமையாலும் இன்னொரு பகுதியில் வெளிவர வேண்டும் எனவிரும்பியதாலுமே ஒருசில பத்திரிகைகள் மீது மாத்திரம் இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் ஐலன்ட் குரூப் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரஞ்சன் மெண்டிஸ் கூறினார்

இந்த வழக்கை விசாரிப்பதற்கு இந்த நீதிமன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டா என்பது பற்றி விவாதிக்க வேண்டும் என சட்டத்தரணி கோரியதை யடுத்து அப்பிரச்னையை விவாதிப்பதற்காக எதிர்வரும் 25-ம் திகதி மீண்டும் இவ் வழக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத்தெரிவித்த நீதவான் விசாரணையை ஒத்தி வைத்தார்.

டெய்லி நியூஸ்பத்திரிகை ஆசிரியர், ஐலன்ட் பத்திரிகையைச் சேர்ந்த பிரசாத் குணவர்தன திவயின பத்திரிகையைச் சேர்ந்த திரு. சுனில்கருபோவில, மற்றும் ஈழநாடு ஆசிரியர் ஆகியோருக் கெதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின் போது ஈழநாடு சார்பில் கொழும்புப்பிரதிநிதி இ. கந்தசாமி நீதிமன்றத்தில் ஆஜராகயிருந்த போதிலும் பத்திரிகை ஆசிரியரே ஆஜராக வேண்டுமென நீதவான் உத்தரவிட்டார்.

# பரு. தபால் நிலையம் வழமையானது

(புலோலி)

பருத்தித்துறையில் ஏற்பட்ட பதற்ற நிலையைத் தொடர்ந்து மூடப்பட்டிருந்த பருத்தித்துறை தபால் நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டு வழமை போல் வேலைகள் நடைபெற்றன.

பாதுகாப்புக்கருதி அதிகாலை 5 மணிக்கு வேலைக்கு வரமுடியாதென்றும் காலை 7 மணிக்கே வரமுடியுமென்றும் ஊழியர்கள் அறிவித்துள்ளனர்.

பாதுகாப்பின்மையால் வேலைக்கு வரமுடியா திருப்பதாக ஊழியர் தெரிவித்ததை தொடர்ந்து பருத்தித்துறை தபால் அதிபர் திரு. சபாபதிப்பிள்ளை, பிராந்தியதபால் அத்தியட்சகர் திரு. மகேந்திரன் மாவட்ட அத்தியட்சகர் திரு. அருளானந்தன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேச்சுவார்த்தையின் போது ஆகஸ்ட் மாதம் முதல் தடவையும் செப்டம்பரில் 2-ம் தடவையும், அக்டோபரில் 3-ம் தடவையும் ஊழியர் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்வதாக அவர்கள் உறுதியளித்தனர்.

இச்சம்பவம் பற்றி தொலைத் தொடர்பு சிற்றூழியர் சங்கத்திற்கும் தபால் அதிபர் சங்கத்திற்கும் அறிவிக்கப்பட்டது. இதுவரை எவ்வித பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று ஊழியர் கவலை தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு பிரவேச பத்திரங்கள் வழங்குவதற்காக பருத்தித்துறை தபால் நிலையம் அதிகாலை 5 மணி முதல் 9 மணிவரை விசேட சேவை நடைபெற்றதாகவும், இதனால் புலோலி, அல்வாய், பருத்தித் துறைப்பகுதி பரீட்சார்த்திகள் பிரவேச பத்திரங்களை உரிய நேரத்தில் பெற்றுக் கொண்டார்கள் என்றும் கூறப்படுகிறது.

## வடமராட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குழுவினரை கொழும்பில் சந்திக்க அமைச்சர் சம்மதித்தார்.

இதனைத் தொடர்ந்து வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாமிம்பிள்ளை, மற்றும் கல்வி பகுதி உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசனை செய்து அமைச்சரைச் சந்திக்கும் குழுவை ஒழுங்கு செய்தார்.

வடமாநில கல்வி பணிப்பாளர் திரு. எம், சிமியாம்பிள்ளை தலைமையில் உள்ள இக்குழுவில் கல்விப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் பருத்தித்துறை பிரஜைகள் குழுதலைவர் திரு கணேசலிங்கம் முன்னாள் ஹாட்லி கல்லூரி அதிபர் திரு. கே. பூரணபிள்ளை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி அதிபர் திரு. டபிள்யு. என். எஸ். சாமுவேல், பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரி அதிபர், வடமாகாண அதிபர்கள் சங்க தலைவரும், சுழிபுரம்விக்டோரியா கல்லூரி அதிபருமான திரு. கே. அருணசலம், யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராசா, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபர், பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவன் ஒருவர் ஆகியோர் இடம்பெறுவர்.

இக்குழுவினர் கொழும்பிற்கு செல்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது. இக் குழுவினர் இன்று அல்லது நாளை கூடி, அமைச்சருக்கு நேரில் எடுத்துக்கூறவேண்டிய விடயங்களைத் தயார்செய்வார்கள்.

அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலியை குழுவினர் சந்திப்பது தொடர்பாக, நாளை புதன்கிழமை திட்டவட்டமான ஏற்பாடுகள் பற்றி தெரிவிக்கப்படும். (க)

# இன்று தீபபூசை

(நீர்வேலி)

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் இன்றுமாலை ஆறுமணிக்கு சுமங்கலி தீபபூசை சிறப்பாக நடைபெறும்

தீபபூசையின் போதுமனோன் மணி அம்பாளுக்கும் முருகப் பெருமானுக்கும் விசேட அபிஷேகமும் பூசையும் அதனைத் தொடர்ந்து பஜனையும் இடம் பெறும்

# "தீவிரவாதிகளை சந்திக்கவிருப்பம்"

(கொழும்பு)

''இந்தியாவில் இருக்கும் தமிழ் தீவிரவாதிகளை சந்தித்து பேசும்வாய்ப்பு கிடைத்தால், அவர்களுடன் பேசி இலங்கை இனப்பிரனைக்கு சுமுகமான தொரு தீர்வை ஏற்படுத்தமுடியும்'' என்ற நம்பிக்கை இருப்பதாக வண வல்பொல ராகுலதேரோ தெரிவித்துள்ளார்.

இவர் புதுடில்லி பௌத்த கலாச்சார நிலைய அழைப்பை ஏற்று இன்று புதுடில்லி பயணமாகிறார். இந்த பயணத்தின் போது தமிழ் தீவிரவாத தலைவர்களை சந்திக்க இவர் விருப்பம்கொண்டுள்ளார்.

## குழுவினர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், இணைப்பு அதிகாரியுடன் தொடர்புகொண்டு தெரிவித்தார்.

அப்பொழுது அக்குழுவினர் கொழும்பு செல்ல முன்னர் அவர்களை சந்திக்க இணைப்பு அதிகாரி சம்மதித்தார். இதனைத் தொடர்ந்து இணைப்பு அதிகாரி அதிபர் மாணவர் குழு இன்று காலை சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

## மரணஅறிவித்தல்

### திருமதி பிறேமரஞ்சினி விஜியகுமார்

திருமதி பிறேமரஞ்சினி விஜியகுமார் காலமானார். இவர் விஜியகுமாரின் அன்புமனைவியும் ரஜீவ்குமாரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகநாதர் திருமதி அகிலநாயகி ஆகியோரின் மகளும், திருமதி நளாயினி தேவி பத்மநாதன், திருமதி சிவமணி சரவணகுமார், சிவா. நாகநாதர், தியாகபாலர் (OMAN), சாந்தபாலர் இவர்களின் அன்பு சகோதரியும், திரு திருமதி S. சிவஞானம் அவர்களின் மருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (9-10-84) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் தெல்லிப் பழையில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**சி. விஜியகுமார்**
(ஓமான்)

புகையிரதநிலைய வீதி,
தெல்லிப்பழை.

118

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegramnumber Telephone 22389 - 24126.